# "தென்கயிலை வாசா"

(திருக்கோணேஸ்வர ஆலய வரலாறு)

# நாட்டிய நாடகம்

## சிறப்பு மலர் - 2014



University of Jaffna
235.1
TEN
204206(AR; Main)

## இராஜரெட்ணம் நடனாலயம்

திருக்கோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை

## இராஜரெட்ணம் நடனாலயம்

வழங்கும்

# "தென்கயிலை வாசா"

(திருக்கோணேஸ்வர ஆலய வரலாறு)

235.1
TEN

AR

UNIVERSITY OF JAFFNA LIBRARY



University of Jaffna
204206
Library

ARCHIVES

# நாட்டிய நாடகம்

204206 204206

06.09.2014 மாலை 4.00 மணி

தி/சென்மேரிஸ் கல்லூரி, கேட்போர் கூடம்.

திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இராஜரெட்ணம்
# நடனாலய நிர்வாகிகள்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. R.C.J.A. செல்வபுத்திரன் |
| உப தலைவர் | : | திரு. இ. மகேந்திரராஜா |
| செயலாளர் | : | திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் |
| உப செயலாளர் | : | திரு. A. அன்ரனிதாஸ் |
| பொருளாளர் | : | திருமதி. கீதாஞ்சலி ஈஸ்வரன் |
| உறுப்பினர்கள் | : | திரு. வேலாயுதம் தயாபரன் |
| | | திருமதி. இரட்ணசுசிலா மகேந்திரராஜா |
| | | திருமதி. மகேஸ்வரி புண்ணியராஜா |
| | | திருமதி. ஜீவசாந்தி திருச்செல்வம் |
| | | திருமதி. தனச்செல்வி ஆனந்தராஜா |
| | | திருமதி. அமுதகலா ரவிச்சந்திரன் |
| | | திருமதி. சத்தியவேணி தவேந்திரன் |

## மலர்க்குழு

திரு. இ. மகேந்திரராஜா
திரு. ஆ. தங்கராசா
திரு. சு. குலேந்திரகுமார்
திருமதி. நிர்மலா பாஸ்கரன்
திருமதி. துஸ்பிக்கா சசிகரன்
திருமதி. தனச்செல்வி ஆனந்தராஜா

## இதழாசிரியர்

திரு. R.C.J.A. செல்வபுத்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA
LIBRARY



UNIVERSITY OF JAFFNA
LIBRARY

வீணைக் கொடியுடையோன் வீற்றிருந்த
கோணை நகர் வளங்கள் சூழ
தேன் பாயும் நதி விழுந்து இரு போகம்
விளையும் பசும் வயல் வெளிகள்
மீன் பாடும் குரைகடலில் வெள்ளியலை
துள்ளிவிழும் மலைத்தொடர்கள்
வானுயர்ந்த மறை பொழிந்து சம்பந்தர்
பதிகம் பெறு தென்கயிலைப் பூமியிதாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற தாயும் தந்தையும் பிறந்த பூமியும்
சொர்க்கத்தை விடச் சிறந்தவை

'என் கடன் பணி செய்து கிடப்பதே'
கலைகள் நிறைந்த இந்த உலகத்திலே கண்கவர் கலையாம்
நாட்டியக் கலையில் ஈடுபடுத்தி ஆக்கமும் ஊக்கமும்
வழங்கிய எனது தாய்க்கும், தந்தைக்கும்

# "தென்கயிலை வாசா"







## சமர்ப்பணம்

நாட்டியக் கலைமணி, நாட்டிய வித்தகி
இசை நடன நவரத்னா, அபிநய ஆசான்
**திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன்**
இராஜரெட்ணம் நடனாலய ஸ்தாபகர்,
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குருவின் பதிவுகளின் பகிர்வுகள்

தாயினும் நல்ல தலைவராக தக்ஷிண கைலாயத்திலே அனந்தகோடி சூரியப் பிரகாசமுள்ள சிங்காசனத்தின் மேல் மலையரசன் மகளாகிய மாதுமையம்பாளை தமது இடப்பாகத்திற் கொண்டு இடப வாகனத்தில் எழுந்தருளி வாசம் செய்கின்ற தென்கயிலை வாசனின் அற்புதத் திருப்பாதங்களைப் போற்றிப் பணிந்து என் முன் உரையைத் தொடர்கின்றேன்.

மனித நாகரீக வரலாற்றிலே கலைகளின் பங்கு ஓர் மகத்தான இடத்தை வகித்து வருகின்றது. கலைகளில் இலயித்து மயங்காத மனங்கள் இல்லை என்றே கூறலாம். அப்படிப்பட்ட ஓர் காந்தம் கலைகளுக்கு மட்டுமே உரித்தான ஓர் சிறப்பம்சமாகும். மனித மனங்களைக் கொள்ளை கொள்ளும் இந்த அற்புத சக்தி வாய்ந்த கலைகள் இறைவனால் எமக்கு அருளப்பட்ட அருங்கொடையாகும். எனவே, இவற்றை அதன் தனித்துவம் மாறாது பேணிப்பாதுகாத்து வளர்த்து எதிர்கால சந்ததியினரின் கரங்களில் கையளிப்பது என்பது கலைஞர்கள் என்று குறிப்பிட்டுக் கூறுவதை விட மனிதர்களாகிய எமது ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

அந்த வகையில், ‘கைமலரால் வடிவம் காட்டியும், முகமலரோடகமும் கூட்டியும், இகபரமோடிசைக்கு மாநடம்’ என்று சிறப்பிக்கப்படும் அழகிய நுண் கலையாம் பரத நாட்டியம் தமிழர்களின் சாஸ்திரிய நடனமாகத் திகழ்வது மாத்திரம் அல்லாமல் ஓர் பாரம்பரியமான நீண்டகால வரலாற்றினையும், தெய்வீகச் சிறப்பினையும் தன்னகத்தே கொண்டு இன்றுவரை அனைவராலும் விரும்பப்பட்டு, ஆர்வத்துடன் பயிலப்பட்டும், இரசிக்கப்பட்டும் வரும் ஓர் வளம் மிக்க கவின் கலையாகும். இசையோடு இழையோடி மனித வளங்களை மகிழவும், நெகிழவும் வைக்கும் இந்த பரதக்கலை பாவம், ராகம், தாளம் எனும் மூன்று அம்சங்களையும் தன்னகத்தே கொண்டு காண்போரின் கண்களுக்கு ஓர் அழகியலின் அற்புத விருந்தாய் அமைகின்றது. இத்தகைய அழகிய ஆடற்கலையினையும், அது தரும் சலங்கையின் நாதத்தினையும் உயிர் நாடியாய் சிரத்தே கொண்டு ஓர் குருவாக கடந்த **30 வருடங்கள்** மாணவர்களுக்கு என் சேவையினை வழங்கிக் கொண்டிருப்பதையிட்டு பெருமிதம் அடைகின்றேன். அன்று 1991ம் ஆண்டு திருமலை மண்ணில் என் பெரும் மதிப்பிற்குரிய தந்தையின் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட இந்த **இராஜரெட்ணம் நடனாலயம்,** இன்று சர்வதேச ரீதியில் பெயர் சொல்லும் அளவுக்கு வளர்ந்து நிற்கின்றது என்றால் அதை நான் செய்த பெரும் பாக்கியமாகவே கருதுகின்றேன். நான் கடந்து வந்த கலைப்பயணத்திற்கு உயிரோட்டம் கொடுக்கும் வகையில் 18ம் ஆண்டு நிறைவினை இட்டு என் மாணவர்களால் அரங்கேற்றப்பட்ட **“அபிநய சாதனா”** நாட்டிய விழா என்றும் **‘இராஜரெட்ணம் நடனாலயம்’** என்ற என் தந்தையின் பெயர் சொல்லும் சாதனையே. அதன் பின்னரும் கூட எனது மாணவர்கள் **சக்தி Classical Dance Star 2010, அரச நடன விழா,** மற்றும் கிழக்கு மாகாணத்தினால் நடத்தப்பட்ட **எழுவானில் நடனப்போட்டி** ஆகியவற்றில் பங்கு கொண்டு **அகில இலங்கை ரீதியில் வெற்றி பெற்றது** எனக்கும், என் நடனாலயத்திற்கும் பெருமை சேர்த்ததுடன் நின்று விடாமல், சர்வதேச ரீதியில் **ஜெயாஞ்சலி International (U.K)** வினால் நடத்தப்பட்ட **நடனப்போட்டியிலும்** தெரிவாகி எனது நீண்ட கால கலைப்பணிக்கு ஓர் ஆத்ம திருப்தியையும் எனக்கு வழங்கியிருக்கின்றார்கள் என்று கூறுவதில் அகமகிழ்வடைகின்றேன்.

வரலாறு என்பது ஓர் வரப்பிரசாதமாகும். இது எல்லா தேசத்திற்கும், எல்லா இன மக்களுக்கும் பொருந்துகின்ற ஓர் விடயம் ஆனால், இன்று திரிபு படுத்தப்பட்ட வரலாறுகளும் நம் மத்தியில் உலாவி வலம் வந்து கொண்டுதான் இருக்கின்றன. இவற்றின் உள் நோக்கங்கள் ஒரு சிலரை மாத்திரம் திருப்திப்படுத்தப் பயன்படுவதால் உண்மையான வரலாற்றில் உள்ள அழகிய உயிரோட்டம் அவற்றில் இருப்பதில்லை. அந்த வகையில் தமிழரின் தெய்வீக வரலாற்றை உலகறியச் செய்ய பாரினில் பலபேர் பல வழிகளிலும் தம்மாலான பங்களிப்பை நல்கிக் கொண்டிருக்கும் இந்நாளில், நான் பிறந்த இப் புண்ணிய பூமிக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் பலகாலமாக இழையோடிக் கொண்டிருந்தது. அப்பொழுதெல்லாம் என் சிந்தையில் தோன்றிய ஒரே ஓர் விடயம் பரதம் மட்டுமே.



Digitized by Noolaham Foundation.

எனவே தான், பரதத்தைக் கொண்டு எமது சிவ பூமியின் வரலாற்றின் நாயகனும், தென்கயிலை வாசனுமாகிய **திருக்கோணேஸ்வரப் பெருமானின்** மகிமையையும், அவர் எழுந்தருளி ஆட்சி புரிகின்ற 'கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்' என்று திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரால் பாடல் புகழ்பெற்று சிறப்பிக்கப்படுகின்ற சப்திக்கின்ற சமுத்திர நீராற் சூழ்ந்த சிவக்ஷேத்திரமாம் **திருக்கோணேச்சரத்தின்** பலநூற்றாண்டுப் பின்னணியைக் கொண்ட வரலாற்றையும் **"தென்கயிலைவாசா"** என்ற நாட்டிய நாடகத்தின் மூலம் உலகறிய அரங்கேறச் செய்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**" மோனத்து இந்த முன்னோன் கூத்தில்**
**உடுக்கையில் பிறந்தது ஓசையின் கூழலே**
**ஓசையில் பிறந்தது இசையின் உயிர்ப்பே**
**இசையில் பிறந்தது கூத்தினது இயல்பே**
**கூத்தில் பிறந்தது நாட்டியக் கோப்பே**
**நாட்டியம் பிறந்தது நாடக வகையே"**

– கூத்தனூர்ச் சாத்தன் –

திருக்கோணேஸ்வரப் பெருமானின் வரலாற்றின் சிறப்பை நாட்டியமும் நாடகமும் ஒருங்கே இணைந்த பாணியில் திருகோணமலைச்சரிதம், திருஞானசம்பந்தர் திருக்கோணேஸ்வரப் பெருமானை நினைந்து தேவாரம் பாடியது, இராவணன் சரிதம், கன்னிகைத் தீர்த்தம் உற்பத்தியான சரிதம், பறங்கியரின் வருகை, ஆலய இடித்தொழிப்பு, குளக்கோட்டன் திருப்பணி, மற்றும் இன்றைய திருக்கோணேஸ்வரப் பெருமானின் நகர்வலம் போன்ற அம்சங்கள் உள்ளடக்கப்பட்டதாக அரங்கேறும் **"தென்கயிலை வாசா"** சிறப்பு மலரினை என் கலைகளின் கண்களாக விளங்கும் என்றும் என் பெரும் மதிப்பிற்குரிய பெற்றோருக்கு சமர்ப்பணம் செய்வதில் மன மகிழ்ச்சியடைகின்றேன்.

வழமை போல நான் நடன நிகழ்ச்சிகளை அரங்கேற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எனது கணவரின் பூரண ஒத்துழைப்பும், சகோதர சகோதரிகளின் ஊக்கமும், மாணவர்களின் தொடர்ச்சியான பயிற்சியும், பெற்றோர்களின் அதீத ஆதரவும் அளப்பரியன. தொடர்ந்தும் எனக்கு ஆசிகளையும் அறிவுரைகளையும் வழங்கி வரும் எனது பெரும் மதிப்பிற்குரிய ஆசான்கள் என்றும் என் சிரம் தாழ்த்திய கௌரவத்திற்குரியவர்கள் ஆவார்கள். மேலும் நடனாலயத்தின் வளர்ச்சிக்கு அன்றுமுதல் இன்றுவரை தோளோடு தோள் நிற்கும் எனது பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், ஆதரவாளர்கள் மற்றும் ரசிகர்கள் அனைவரையும் வாழ்த்தி தொடர்ச்சியாக அனைவரினதும் அன்பினையும், ஆதரவினையும் அக மகிழ்வுடன் எதிர்பார்க்கின்றேன்.

- நன்றி -


நாட்டியக் கலைமணி, நாட்டிய வித்தகி
இசை நடன நவரத்னா, அபிநய ஆசான்,
திருமதி. **ரேணுகாதேவி செல்வபுத்திரன்**
இராஜரெட்ணம் நடனாலய ஸ்தாபகர்,
திருகோணமலை.


பார்தாங்கு கோயிலும் பொன் மண்டபமும்
கோபுரமும் பரற்கு நாட்டி
ஏர் தாங்கு மாயனுக்கு அலங்கார
ஆலயம் ஒன்றியற்றி முற்றும்
கார் தாங்கு திருக்குளமும் பாவ நாசனச்
சுனையும் கண்ட கண்டன்
சீர்தாங்கு குளக்கோட்டன் என்னும்
சோழ காங்கனை நம் சிந்தை வைப்போம்.

– தெட்சண கயிலாச புராணம் –





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேஸ்வரம் ஒரு நோக்கு



மூம் முனைகள் மூன்று கோணங்கள் திரிகோணமலையாயிற்று. இக்குன்றின் மீதமர்ந்து அன்பர்களுக்கு அருள் மழை பொழிவர் திருக்கோணேஸ்வரப் பெருமான் மாதுமை நாயகன் வாழ்க்கையில் எதிர் நீச்சல் போடு வெற்றியடைவாய் கஷ்டப்பட்டதால்தான் வாழ்வில் ஒளியைக் காணலாம். எனவே அன்பனே இக்குன்றின் மேல் பிரதிஸ்டை செய்யப்பட்டிருக்கும் என் லிங்க வடிவையேனும் காணவேண்டுமாயின் குன்றின் மீது ஏறிவா - ஆம்

எம்பெருமானின் தலைவாயின் (கோட்டை) உள் நுழைந்ததும் தென்படும் **மலை ஏற்றங்கள்** இப்படித்தான் பேசுகின்றன. பக்தர்கள் வியந்து களைப்புடன் கஷ்டப்பட்டு மலையேறித்தான் அந்த ஜோதியைத் தரிசிக்க வேண்டும். அந்த தரிசனத்தில் கிடைக்கும் இன்பமே அலாதி, மலை ஏறும் போதே வாழ்க்கைப் பிரச்சினைகள், துன்பங்கள், சலனங்கள், சபலங்கள் எல்லாம் பொடியாகின்றன. அவன் தரிசனம் ஒன்றே சிந்தனையில் நிறைந்து நிற்கும்.

**அலைமோதும் பாறைகள்** இப்பிறவிப் பெருங்கடலின் துன்பங்கள் பெரு மலைகளாக வந்து மோதினும் எம் பெருமானைத் தாங்கி நிற்கும் எங்களைப் போல் திண்மையாக நின்று ஆட்சி செய் என்கின்றன.

**துள்ளி விளையாடும் புள்ளிமான்கள்** திரிகயிலைப் பெருமான் காலடியில் தொல்லையின்றி வாழ்கின்றோம் பார் எனப் பெருமிதத்துடன் உலாவுகின்றன. **மந்திகள்** உந்தும் ஆசைகளை நிந்தி என வலியுறுத்துகின்றன. நீ வருடம் முழுவதும் செய்கின்ற பாவங்களை ஒரு நாளில் தான் கழுவக்கூடும் ஆகவே பாவம் செய்யாதே ஆனால் சக்தி மிக்க கங்கையின் ஊற்றிலிருந்து வருகின்றேன் அதனால் உன்பாவங்களைத் தீர்த்த நன்நாளில் கழுவுகின்றேன் பாபநாசம் செய்கின்றேன் வா என்கிறது **பாவ நாசக் கிணறு.** நீ செய்யும் பாவங்களையெல்லாம் நான் கழுவுவேன் என்பது பொருளல்ல என் பாவங்களை இன்றுடன் கழுவுகின்றேன் இனியும் பாவம் செய்யாது இருப்பேன் என்று நம்பிக்கையை உன்னுள் வலுப்படுத்துகின்றது.

**இராவணன் வெட்டு மலை விளிம்பு** இவற்றைப் பார் மரணத்தின் பயங்கரம் உன் நினைவுக்கு வரும் இப் பயங்கரத்திற்குத் துணை யார்? அதோ மாதுமையோடு காட்சி தருகின்றான் எம் பெருமான் அவன் பாதார விந்தங்களைச் சேர் நீ செல்லும் வாழ்க்கைத் துணை அவன்தான்.

அன்பர்களே கோணநாயகப் பெருமான் எழுந்தருளியிருக்கும் குன்று சூழல் எல்லாமே நமது வாழ்க்கையை நெறிப்படுத்த ஒவ்வொரு வகையில் அமைகின்றன மேற்குறிப்பிட்டவாறு ஒவ்வொரு இடத்தையும் உற்று நோக்குவோமாயின் தன்னை சேர்வதற்கு திருக்கோணேஸ்வரப் பெருமான் பக்தர்களுக்கு அளிக்கும் ஒரு பாலமாகவே அவை அமைகின்றன. **எம் பெருமானின் பூமி என்றும் புண்ணிய பூமியே.**

**இரா. மகேந்திரராஜா**
பிருந்தாவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

இலங்கை நாட்டின்
வரலாற்றினை அறிவது
அந் நாட்டினர்
எல்லோருக்கும் இன்பம்
தருவது ஒன்றாகும்.
தேவாரம் பெற்ற சிவ
ஸ்தலங்கள் இரண்டு இவ்
இலங்கையில் உள்ளது.
ஈழத்தின் கிழக்கே
கடற்கரையை அண்டி
அமைந்திருப்பது
திருக்கோணேஸ்வரம். இவ்
இடத்தின் பெருமையும்
வரலாறும் கூறும் ஏடுகள்
பல.

பிரமாண்டத்தின் இடை நாடியென எடுத்தோதுகின்றது சாந்தோக்கிய உபநிடதம். இதைச் சிவபூமி என பாராட்டுகிறார் திருமூலர். புண்ணிய பூமியென போற்றுகிறது தெட்சண கைலாச புராணம். அனுக்கிரகத் தலமென அழைக்கின்றார் திருவாதவூரடிகள். பல்வளம் நிறைந்த பழம் பதியெனக் கந்த புராணம் காட்டுகிறது. எல்லோரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தி வாய்ந்த இணையில்லா நகரம் என இராமாயணம் இயம்புகிறது. தாயினும் நல்ல தலைவர் உறையும் கோயிலும் சுனையுங் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை என்கிறது திருஞான சம்பந்தர் தேவாரம். திருகோணமலைத் தலத்தாறு கோபுர நிலைக்குள் வாயினுள் கிளிபாடு பதியில் வருவோனே என்கிறார் அருணகிரிநாதர்.

இவைகளை நினைக்கும் போது இப் புண்ணிய பூமியிலே வாழக் கிடைத்ததே நாம் பெற்ற பாக்கியமாகும். இத்தலத்தின் பாரம்பரியத்தை வரலாற்று முறையாக ஆராய்ந்து தெளியும் போது எல்லையற்ற பேரானந்தம் உண்டாகின்றது.

இப் பரம்பொருளின் ஆலய வரலாற்றினை கொண்டு தென்கயிலை வாசா எனும் நாட்டிய நாடகத்தினை இராஜரெட்ணம் நடனாலயம் வழங்குகிறார்கள். இதை எண்ணும் பொழுது கோணேசப் பெருமானுடைய அருள் வலம் உங்கள் இதயத்தில் சுரந்து சிந்தனையும், மெய்யுணர்வும் நிறைய வேண்டும் என்பது எமது விருப்பமும் அவாவும் கூட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிரதம விருந்தினரின் ஆசிச் செய்தி

### தென்கயிலை வாசா

தெட்சண கயிலாயம் என அழைக்கப்படும் திருக்கோணேஸ்வர ஆலய வரலாற்று நாட்டிய நாடகத்திற்குப் பிரதம விருந்தினராக என்னை அழைத்தமைக்கு "இராஜரெட்ணம் நடனாலயத்திற்கு" எனது நன்றிகளை தெரிவிப்பதுடன் ஆலய வரலாற்று நாட்டிய நாடகம் சிறப்புற அமைய எனது ஆசிகளையும் தெரிவிக்கின்றேன்.

"சிவனின் ஒரு வடிவம் உருத்திர தாண்டவம்" அந்த தாண்டவத்தை கோணேஸ்வரத்தில் பார்த்தேன். மாதுமை அம்பாளுடன் வீற்றிருக்கும் வடிவத்தில் சக்தியின் திருவுருவத்தைப் பார்த்தேன். மாமன்னன் இராவணன் பூசித்த கோணேஸ்வரம், இராவணனால் வெட்டப்பட்ட இராவணன் வெட்டு, திருஞானசம்பந்தர் தேவராம் பாடி அழகு பார்த்த கோணேஸ்வரம் என பல புகழ்களை உடைய வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருத்தலத்தின் வரலாற்று நாடகம் சிறப்புற அமைய எனது ஆசிகள் பல கோடி.

இறுதியாக இந்த நாட்டிய நாடகத்தை அரங்கேற்றும் திருமதி. ஆர்.செல்வபுத்திரன் திருமலை வரலாற்றில் போற்றி பாதுகாக்கப்பட வேண்டிய கலைத்தாய். இராஜரெட்ணம் நாட்டிய ஆலயத்தை சிறப்புற அமைத்து மாபெரும் திருக்கோணேஸ்வர வரலாற்று நாட்டிய நாடகத்தை அரங்கேற்றும் அம்மணிக்கு எனது உள்ளம் கனிந்து வாழ்த்துக்கள், பாராட்டுக்கள் பல கோடி.

"கோணேசர் என்னை அழைத்தார்
கடமையை பொறுப்பேற்றேன்
கடமையை முடிவுறுத்தும்படி பணித்தார்
கடமையை முடித்து விலகினேன்
மீண்டும் அழைத்தார், வந்தேன்
பதவி உயர்வு தந்து அழகு பார்த்தார்
உனது சேவை வேறு இடத்திற்கும் தேவை என்றார்
விலகி சென்றுள்ளேன்.
மீண்டும் அழைத்தால் வருவேன்"

"திருமலை நீதியின் புகழ் ஓங்க கோணேஸ்வர பெருமானின் பாதச் சுவடுகளில் இந்த ஆசிச் செய்தியை காணிக்கையாக்குகின்றேன்."

- நன்றி -

**மா.இளஞ்செழியன்**
மேல்நீதிமன்ற நீதிபதி,
கிழக்கு மாகாணம், கல்முனை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



திருக்கோணேஸ்வரரின் வரலாற்றை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட தென்கயிலை வாசா நாட்டிய நாடக விழாவின் சிறப்பு மலருக்கு ஆசி வழங்குவதில் உவகையும் உயர் கௌரவமும் பெறுகின்றேன்.

பாரம்பரிய கலாச்சார விழுமியங்களின் கலவை கலையாகும். கலை காலம் மாறிய போதும் மாறாத பண்புகளைத் தன்னகத்தே கொண்டவை. கலை கடவுளிடமிருந்து மனிதனுக்கு கொடுக்கப்பட்ட அற்புதமான கொடை. சங்க காலத்திற்கு முந்திய காலங்களில் கலையை வளர்க்கும் பணியை கடவுள் பார்த்துக் கொண்டான். அதைப் பேணிப் பாதுகாக்கும் பொறுப்பு பின்னர் அவனது பிரதிநிதிகளான மனிதர்களிடம் ஒப்படைக்கப் பட்டது.

எனவே கலை யாரிடம் இருக்கின்றதோ அவர்கள் ஆண்டவனின் அருட்கடாட்சம் பெற்றவர்கள். இந்து சமயத்தில் நடனக் கலை என்பது கடவுளின் பண்புகளை, குணங்களை பல்வேறு பாவங்களுடன் மனிதர்களுக்கு ஒப்புவிக்கும் ஒரு ஊடகமாகும். இசை, ஓவியம், நடனம் என்பவை ஒரு புள்ளியிலிருந்து ஆரம்பமாகி எல்லையின்றி வியாபித்துச் செல்லும் கலைகளாகும். ஒரு ஓவியத்திற்காக இடப்படும் முதல் புள்ளியும், இசையில் முதல் ஸ்வரம் "ஸ" வும் நடனத்தின் "சிலை நிலை" யும் இறைவன் எமக்குத் தந்த வரமாகும். ஒரு புள்ளி வளைந்து நெளிந்து ஓவியமாய் பரிணமிப்பதும், "ஸ" எனும் ஸ்வரம் ஏழுஸ்வரங்களையும் இணைத்து நெடிலாகவும், குறிலாகவும் ஒலி அலைகளை எழுப்பி இசை மாலைகளைக் கோர்ப்பதும், "சிலை நிலை" மாறி உடலின் ஒவ்வொரு அங்கமும் நெளிந்து வளைந்துவியத்தகு பாவங்களை வெளிப்படுத்தும் நாட்டியமாக நர்த்தனமாடுவதும் இறைவன் எமக்குத் தந்தஅருளாகும்.

இந்த இறையம்சம் மிக்க புனித நடனக் கலையை வளர்ப்பதற்காக தன் வாழ்வின் பெரும் பகுதியைத் தியாகம் செய்து வரும் நாட்டியக் கலைமணி திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரனை கலைமகள் பெற்றெடுத்த தவப்புதல்வியாகவே நான் பார்க்கின்றேன்.

வரலாறு பற்றி பலர் எழுதுவதுண்டு. ஆனால் வரலாறு சிலரைப்பற்றி மட்டுமே எழுதும். அவர்களில் இவரும் ஒருவர். ரேணுகாதேவி சாதனைகளின் சங்கமம். வெற்றியின் உச்சியில் இவர் பெயர் என்றும் தங்கும். பெறும் விருதுகளில் இவர் தங்கம். இவரது புகழ் பரவ வேண்டும் எங்கும். இந்தப் பூமாதா அவரை நீடுழி காலம் தாங்கும். அதனால் எமது கிழக்கு மண் இன்னும் புகழ் வாங்கும். அவர் ஆடினால் கவலைகள் நீங்கும். இன்னும் கிடைக்காதா என மனம் ஏங்கும். தொடர் சாதனைகளால் இன்னும் அவர் புகழ் ஓங்கும். யாழிலும், எழில் மிகு மலையிலும், கொழும்பிலும் என அங்கும், இராஜரெட்ணம் நடனாலயம் மூலம் இங்கும் என அவரது சாதனைகள் சரித்திரத்தில் தங்கும். மொத்தத்தில் அவர் கலைமகளின் சாங்கம்.

கலையும், கலாச்சாரமும் காலவோட்டத்தில் மறைந்து விடாது அவற்றை உயிப்பிக்கப் போராடும் உள்ளங்களை வாழ்த்துவதில் தமிழ் அழகு பெறும் என்பது எனது நம்பிக்கை. நாட்டிய நாடகம் என்பது இசையுடன் இணைந்து உணர்வுகளைத் தட்டிவிடும் உயிர்த்துடிப்பினைக் கொண்டவை. அவை என்றும் வாழ உழைக்கும் இராஜரெட்ண நடனாலயக் குழுவினை வாழ்த்துவதில் பாக்கியம் பெறுகின்றேன். திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் நாட்டிய நாடக வரலாற்றின் ஒரு மைல் கல்.

**வாழ்க வளமுடன்!**

**M.T.A.நிஸாம்**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன், திருகோணமலையின் சிறந்த ஆசிரியர்களுள் ஒருவராவார். நாட்டியக்கலையில் தலை சிறந்த ஆசான்களிடம் பயின்ற திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன், தானும் நல்லதொரு குரு என்பதை, பல கலை நிகழ்ச்சிகள் மூலம் நிரூபித்து வருவது மட்டுமன்றி பல விருதுகளைப் பெற்று தனது மாணவச் செல்வங்களுக்கும் பற்பல விருதுகளைப் பெற்றுக் கொடுத்து வருவது மகிழ்விற்குரிய விடயமாகும்.

திருகோணமலையின் வரலாற்றுச் சிறப்பைப் பரதக் கலையினூடாக வெளிப்படுத்தும் நோக்கில் இவருடைய "தென்கயிலை வாசா" எனும் நாட்டிய நாடகம், எம் மண்ணில் வரலாற்றுச் சிறப்பினையும், ஆன்மீகச் சிறப்பினையும் கருவாய்க் கொண்டு உருவாகியுள்ளதாய் அறிகின்றேன். இது ஒரு மிகச் சிறந்த கலை முயற்சி ஆகும்.

திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரனின் கலைச் சேவை தொடர்ந்து மேலோங்குவதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை வழங்குகின்றேன்.

திருமதி. **சசிதேவி ஜலதீபன்**
பிரதேச செயலாள், பிரதேச செயலகம்,
பட்டினமும் சூழலும், திருகோணமலை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



The Temple complex known as Thiru Koneswaram is steeped in legend and romance. It is one of the five ancient Eeswarams in Sri Lanka, and is alluded to in the great epics and chronicles of India and Sri Lanka.

Its mythic origins, the wonder and beauty of its architecture and natural setting, the tragedy of its destruction by the sea and by foreign invaders, the mystery of the underwater ruins, its rediscovery and rebuilding and, above all, its spiritual significance are some of the many fascinating strands in a large and complex story.

To try to narrate this epic story in the form of a dance drama (naattiya naadagam) is an audacious and arduous venture. It calls for a great deal of artistic imagination and choreographic innovation, and of course large reserves of skill, dedication and hardwork in the performance and staging. But I have no doubt that Mrs Renukathevi Selvapuththiran, and her pupils and her Institution, the **Rajaratnam Nadanalayam**, are fully up to this challenge. Their past productions and achievements and the numerous awards that they have won in prestigious dance festivals and all-island competitions gives me every confidence that this evenings' programme would be exciting and enjoyable.

I wish them well in this daring venture, and look forward to a great evening of entertainment and enlightenment.

**Dr Xavier Emmanuel**
MA, PhD, FRCP(Edin), FRCPath
London, September 2014.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



**"இராஜரெட்ணம் நடனாலயம்** வழங்கும் **தென்கயிலை வாசா நாட்டிய நாடகம்"** தெட்சணகயிலாய புண்ணிய பூமியில் அரங்கேறும் செய்தி அகமகிழ்வைத் தருகிறது.

இவ் நடனாலயம் பல ஆண்டுகளாக திருக்கோணமலையில் பரதக் கலையும் தமிழர் பண்பாடுகளையும் வளர்க்க அளப்பரிய பெரும் பணியாற்றியமை பாராட்டுக்குரியதாகும். பரதக்கலை வழிநின்று கலைகளையும், சாஸ்த்திரங்களையும், தமிழர் பண்பாடுகளையும் வளர்க்கும் இவ் நடனாலயம் தன்னுடைய ஈடு இணையற்ற பணிகளால் ஏற்றமிகு நல்வாழ்வு பெறவும் பல்கிச் சிறக்கவும் மலர் மாண்புடன் விளங்கி மணங்கமிழவும் குளமும், கோட்டமும் அமைந்த கோணேசப் பெருமான் கோயில் கொண்டு விளங்குவதும், அன்னை பத்திரகாளி அம்பாள் உடனுறையும் திருக்கோணமலையினின்று திக்கெட்டும் புகழ் எட்ட நடனக்கலை வளர்க்கும் இராஜரெட்ணம் நடனாலய இயக்குனராக விளங்கும் திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்களது உள்ளத்தில் கோணேசப் பெருமான் எழுந்தருளி எமது மக்கள் அறியும் பொருட்டு ஒரு வரலாற்று நாட்டிய நாடகத்தை உருவாக்கி மேடை ஏற்றுமாறு அவரது உணர்வில் அருளிய கட்டளையை சிரமேற்கொண்டு "இராஜரெட்ணம் நடனாலயம்" வழங்கும் **"தென் கயிலை வாசா"** நாட்டிய நாடகம் மாதுமையம்பாள் சமேத கோணேசப் பெருமான் உடனுறையும் தெட்சணகயிலாய புண்ணிய பூமியில் அரங்கேறுவதையிட்டு நான் அகமகிழ்கிறேன்.

நாட்டியத்தில் காட்டமுடியாத ஞானமோ, சிறப்போ, கலையோ, செயலோ எவையுமேயில்லை. சாஸ்திரங்கள் அனைத்தையும் இதிலே காட்டலாம் இதே கருத்தை சிலப்பதிகாரத்தின் அரங்கேற்றக் கதையில் வரும் கீழ் வரும் பாடல் தெளிவுபடுத்துகின்றது.

**"எண்ணும் எழுத்தும் இயலைந்தும் பண்ணான்கும்**<br>
**பண்ணின்ற கூத்துப் பதினொன்றும் – மண்ணின் மேல்**<br>
**போக்கினாள் பூம்புகார்ப் பொற்றொடி மாதவிதன்**<br>
**வாக்கினால் ஆடரங்கின் வந்து"**

இந் நாட்டிய நாடகம் திருக்கோணேஸ்வரம்பற்றி தெரிந்திருக்கும் அனுபவத்திலிருந்து தெரியாத அனுபவத்திற்கு கைபிடித்து அழைத்துச்செல்லும். கோணேசப்பெருமானின் புகழ்பாடும் இவைகள் ஆலயத்தின் பெருமைகளுடனே இம் மண்ணில் வளம் மக்களின் வாழ்வு, ஆன்மீகம், கலாச்சாரம், கலை, இலக்கியம் என்கின்ற அனைத்தையும் ஒன்று சேர்த்து தொட்டுச் சென்று தாம் வாழ்ந்த சமூகத்தை, சமயத்தை, மொழியை குறித்து அக்கறையோடும் திருக்கோணேஸ்வரத்தை மையமாக கொண்டு அதன் வரலாற்றை நாட்டிய நாடகமாக ஆக்கிய பெருமதிப்புக்குரியவர் திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்களை வாழ்த்துவதிலும் இவ் ஆசிச்செய்தி எழுதுவதிலும் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

திருக்கோணமலை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்கள் அமரர்.ஐ.இராஜரெட்ணம் வள்ளிநாயகம் அவர்களது புதல்வி இவரது தந்தையார் எனது தந்தையார் திரு.க.கந்தசாமி அவர்களின் நண்பர் திருக்கோணமலை விஸ்வநாதசுவாமி (சிவன்) கோயில் நடராஜ பஜனைக் குழுவில் முக்கியமானவர்கள். எனது தந்தையார் அமரர் கந்தசாமி அவர்களும் அமரர் இராஜரெட்ணம் அவர்களும் முக்கிய இசை வாத்தியங்களை ஒன்றிணைத்து வாசிப்பவர்கள்.

அமரர் இராஜரெட்ணம் அவர்கள் இயற்கையாகவே நடனம், சங்கீதம் என்பவற்றில் ஈடுபாடு கொண்டவர் இவர் தனது மகளான ரேணுகாதேவியை நடனக் கலையில் பாண்டித்தியம் பெற்றவராக உருவாக்கி அதனூடாக திருக்கோணமலையில் "கலை" ஞானத்தை வளர்க்க வேண்டும் என்ற இலட்சியத்துடன் செயற்பட்டார் அதில் வெற்றியும் பெற்றார். இவரது இந்த அயராத முயற்சியின் பலனாக ரேணுகாதேவி அவர்களது திறமையும், ஆர்வமும், ஈடுபாடும், சிறந்த நாட்டிய வித்தகி என்ற சிறப்பு பெயருடன் நாட்டிய மாமணியாக அவர் திகழ்வதை இன்று நாம் காண்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1991ம் ஆண்டு தனது தந்தையாரின் இலட்சியத்தை நிறைவேற்ற **"இராஜரெட்ணம் நடனாலயம்"** என்ற கலைபீடத்தை உருவாக்கி முழு நேரமும் இப்பணியில் தன்னை அர்ப்பணித்தவர் திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன்.

இத்தகைய கலைகளை தொன்றுதொட்டு பேணிவருவதில் அழகியல் ஆசிரியர்களுக்கே முக்கிய பங்கு இருந்து வந்துள்ளது. இக்கலைகள் வழிவழியாகப் புதிய தலைமுறையினரிடம் கையளித்து மாபெரும் பண்பாட்டுப் பணியைச் செய்து அவற்றைப் பேணிப் பாதுகாத்து வந்த இவ்வாசிரியர்கள் தமிழ் கூறும் நல்லுலகத்தினால் போற்றுதற்குரியவர்கள்.

இக்கலைக்கு வலுவாக இவரது சேவை விளங்குவதுடன் சமஸ்கிருதமும் கற்றுக் கொண்டதன் மூலம் நடனக்கலையின் விரிவாக்கத்தை ஆய்வு செய்து இதில் வெற்றியும் கண்டார். இதன் பயனாக 2004ம் ஆண்டு **"ஜெயாஞ்சலி"** விருது 2011ம் ஆண்டு மகளீர் தின விழாவில் **சாதனையாளர் விருதும்** தொடர்ந்து அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற நடன விழாவில் இவரது **"இராஜரெட்ணம் நடனாலயம்" முதலாவது** இடத்தைப் பெற்றதையிட்டு நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

2013ம் ஆண்டு சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு என்னால் வழங்கப்பட்ட திருக்கோணமலை மண்ணுக்கு பெருமை சேர்த்தவர்களுக்கான **"நகர முதல்வர் விருது"** வழங்கும் விழாவில் சிறந்த **நடனக்கலை சாதனையாளருக்கான விருது** இவருக்கு கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்கள் நமது திருக்கோணமலை பெற்றெடுத்த "நடனகலா அபிநய வித்தகி" எனச் சுருக்கமாக கூறி பாடல் பெற்ற திருக்கோணேஸ்வரத்தின் குளக்கோட்டன் சாம்ராஜ்யத்தின் சாதனைகளையும், சரித்திரப் படைப்புகளையும் மீண்டும் **"தென்கயிலை வாசா நாட்டிய நாடகம்"** மூலம் எடுத்தியம்ப காலடி பதிக்கும் இவ்விழா தெட்சணகைலாசம் எனும் திருக்கோணேஸ்வரத்தில் நிகழ்வது திருக்கைலாயத்தில் நிகழ்வது போன்று பெருமைக்குரியது இதனை நினைத்து நானும் எனது நகர மக்களும் அகமகிழ்கின்றோம்.



இவ் உத்திதனை உருவாக்க முயன்ற ரேணுகாதேவியும் அவரோடு இணைந்தவர்களையும் உளமார வாழ்த்துவதற்கு இடம் கொடுத்தமையை எண்ணி மகிழ்வடைகின்றேன் சொல்வது யாவர்க்கும் எளிமை, அதனை செய்வது அரியவரம் பல இடர்பாடுகளுக்கு மத்தியில் இதை உருவாக்கி மேடையேற்ற எடுத்துள்ள இந்த முயற்சியினை பெரிதும் போற்றுகின்றேன்.

ஆர்ப்பரிக்கும் கடல் அலைகள் முத்தமிட அருள்பாலிக்கும் கோணேசப் பெருமானின் வரலாற்றை வெளிக்கொண்டு வரவேண்டும் என்ற தங்களின் எண்ணமும் செயற்பாடும் போற்றுதலுக்கும், பாராட்டுதலுக்குரியதுமாகும். இக் கலைகள் தமிழர் தம் இனத்துவ அடையாளத்தின் முக்கிய சின்னங்கள் என்பதில் ஐயமில்லை. இந்த முயற்சி இளம் சந்ததியினருக்கு எமது பண்டைய பாரம்பரிய கலைகளையும் வரலாறுகளையும் அறிந்து கொள்ள ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைவதுடன் கலைகளின் விருட்சமாய் தமிழர்களின் அடையாளங்களாய் திகழ வேண்டும் என்பதில் ஐயமில்லை. இதனை **"தென்கயிலை வாசா நாட்டிய நாடகம்"** மூலம் உருவாக்கி கோணேசர் பூமியில் அரங்கேற தாங்கள் எடுத்த முயற்சிக்கு நல்லாசிகளை வழங்குவதோடு இவ் "இராஜரெட்ணம் நடனாலயம்" மேலும் இறைவன் திருவருளுடனும் சிறந்து விளங்க எனது வாழ்த்துக்களையும் கோணேசப் பெருமானின் அருளையும் வேண்டி நிற்கின்றேன்.

- நன்றி -

மக்கள் சேவையில்.........
நகரமுதல்வர்
**க.செல்வராஜா (சுப்ரா) J.P.U.M**
நகராட்சி மன்றம், திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

இலங்கைத் திருநாட்டின் கிழக்குக் கரையோரத்தில் **தெட்சணகைலாயம், சிவபூமி, திரிகூடம், கோகர்ணம்** என்றெல்லாம் நாமங்களைக் கொண்டு விளங்கும் வரலாற்றுப் பெருமை கொண்டது திருகோணமலை.

திருகோணமலை நகரத்தில் **"இராஜரெட்ணம் நடனாலயம்"** எனும் நாட்டிய கலாமன்றம் மிகவும் சிறப்பான முறையில் தனது பணியை ஆற்றிவருகின்றதென அறிகின்றோம். மேற்படி நடனாலயம் **"தென்கயிலை வாசா"** நாட்டிய நாடகத்தினை நடாத்தி இவ்விடயம் தொடர்பான **சிறப்பு மலர்** ஒன்றினை வெளியிடுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

நாட்டிய கலாலயங்கள் நடனத்துறை வளர்ச்சியில் பெரும் பங்காற்றவேண்டிய கடமைப்பாடுள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாக **"இராஜரெட்ணம் நடனாலயம்"** இந்நிகழ்வினை நடத்துவது பாராட்டத்தக்க விடயமென்று குறிப்பிடுவதோடு ஏற்பாடு செய்யப்பட்ட இக்கலைப்படைப்பிற்கும் சிறப்பு மலரிற்கும் எனது ஆசியினையும் வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**டபிள்யூ.ஏ.எல்.விக்கிரம ஆரச்சி**
பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



இராஜரெட்ணம் நடனாலயம் என்னும் பரதநாட்டியக் கலைநிறுவனத்தை வழிநடாத்தி வரும் நாட்டிய கலைமணி திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் என்பவர் பல காலமாக எனக்கு நன்கு அறிமுகமானவர்.

இவர் பட்டங்கள் பல பெற்றவர். விருதுகள் பல இவருக்கு கிடைத்திருக்கின்றன. இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம், மற்றும் சக்தி தொலைக்காட்சி நிறுவனங்களில் நடந்த பல போட்டிகளில் தனது மாணவிகள் மூலம் நிகழ்ச்சிகளை திறம்பட நடாத்தி பரிசுகள் பல பெற்றவர். பொது நிகழ்ச்சிகளிலும், ஆலயங்களிலும், குறிப்பாக ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் ஆண்டு தோறும் நடக்கும் திருவிழாக் காலங்களில் ஒவ்வொரு முறையும் தனது நாட்டிய நிகழ்ச்சிகளை நடாத்தி அம்பாளின் அனுக்கிரகங்களையும் அன்பர்களின் பாராட்டுக்களையும் பெற்று வருகின்றார்.

இவ்வகையில் **"தென்கயிலை வாசா"** என்னும் நாட்டிய நாடகத்தினை தொகுத்து வழங்க இருக்கின்றார் என்பதுதான் சிறப்பம்சமாகும்.

விஷேசமாக திருக்கோணமலையில் புராதன காலம் தொட்டு சரித்திர புகழ்பெற்ற பல இடங்களில் சிலவற்றை தேர்வு செய்து அதன் அருமை பெருமைகளை நாடகமாக தொகுத்து நாட்டிய நாடகம் மூலம் இக்கலையுலகத்திற்கு கொண்டுவரும் முழு முயற்சியில் இறங்கியுள்ளார். இவரை எமது கலையுலகம் ஊக்கப்படுத்தி ஒத்தாசை வழங்கி பாராட்டியேயாக வேண்டும். நாட்டிய கலை மணி திருமதி ரேணுகாதேவி செல்வபுத்திரனின் இப்பணி மென்மேலும் வளர வேண்டும். இவருக்கு அருள் மிகு அன்னை ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் அனுக்கிரகம் என்றும் துணையிருக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

- நன்றி, வணக்கம் -

இவ்வண்ணம்
**பிரம்ம ஸ்ரீ சோ. இரவிச்சந்திர குருக்கள்**
ஆலய பிரதம குருவும், ஆதீனகர்த்தாவும்
அருள் மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆசிச் செய்தி

இந்து மாசமுத்திரத்தின் முத்தென விளங்கும் நமது ஈழநாட்டில் பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றாகவும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் போற்றிப் பாடப் பெற்றதுமாகிய திருக்கோணேஸ்வரத் திருத்தலத்தில் மாதுமை அம்பாளுடன் வீற்றிருந்து அருள்பாலித்து வருகின்ற கோணேஸ்வரப் பெருமானைப் பணிந்து, **"இராஜரெட்ணம் நடனாலயத்தின்"** ஏற்பாட்டில் **"தென்கயிலை வாசா"** நாட்டிய நாடகம் அரங்கேற்றப் படுவதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

பரதநாட்டியம் தமிழருக்குரிய கலைகளில் ஒன்று. சங்ககாலத்தில் இது கூத்து, ஆடல் போன்ற சொற்களால் அழைக்கப்பட்டது. இந்தியாவில் பிரதேச ரீதியாக சிறப்புற்று விளங்கும் கதகளி, கதக், மணிப்புரி, பரதநாட்டியம், போன்ற நடனக்கலைகளுள் பரதநாட்டியம் தமிழ்நாட்டிற்கு மட்டும் உரியதான கலையாக இல்லாது முழு இந்தியாவிற்குமான பொதுவான நுண்கலை வடிவமாகத் திகழ்கிறது. அத்தோடு எம்பெருமான் தில்லைக் கூத்தனும் தாண்டவம் ஆடி இக்கலைக்கு சிறப்பு சேர்த்துள்ளார். இத்துணை சிறப்பு வாய்ந்த பரதநாட்டியம் எமது நாட்டிலும் சிறப்புற்று விளங்கவேண்டும் எனும் நோக்கோடு ஓர் நடனாலயத்தை அமைத்து குருகுல பாரம்பரியத்தோடு இக்கலையை பயிற்றுவிப்பதோடு மட்டுமின்றி, இன்று இந்த **"தென்கயிலை வாசா"** நாட்டிய நாடகம் மேடையேற்றப்பட இருப்பது சிறப்பான கைங்கரியமாகும். இப்பணி இனிது நிறைவடைய எல்லாம் வல்ல மாதுமையாள் சமேத கோணேசப் பெருமானை பிரார்த்திக்கின்றேன்.

*ஸ்ரீ கோணேஸ்வரம் மாதுமார்சிதம்*
*திரிகுணபூரகம் திரிதளார்பணம்*
*திரிபுரஹாரகம் ராவணார்சிதம்*
*அசலவாஸிநம் சுவாமிதேவமாச்ரயே.*

**சிவஸ்ரீ.மு.சண்முகரெத்தினக்குருக்கள்**
பிரதமகுரு, திருக்கோணேஸ்வரம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



தென்கயிலை வாசன் கோணேசனின் கலைப்புதல்வி திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் திருக்கோணமலையின் சிறந்த பரதநாட்டிய ஆசிரியை, நாட்டிய ஆசான் திரு. ம.கயிலாய பிள்ளை இவரது முதற் குரு.

தொடர்ந்து கற்றார் பரதம் அது தந்தது பலபட்டம், பல அரங்காற்றுகைகள்..... பல அரங்கேற்றுகைகள். பரதம் இறையோடு இணைந்த கலை. அது இன்று புற உலகோடு சித்தம் கலைய உறவாடி, அகம் துறந்து புனிதம் கலைந்து எங்கோ போய்க் கொண்டிருக்கையில் பரதக் கலையின் தெய்வீகம் உணர்ந்து அதன் பண்பாடு, இலக்கணம், கட்டமைப்பு மாறாது, சிறப்பாகக் காப்பாற்றிவரும் ஆசிரியர்களுள் இவரும் ஒருவர் என்பது பெருமைக்கும் சந்தோஷத்திற்கும் உரியது.

இவரது பல அரங்கப் படைப்புக்களின் சிகரமாக **"தென்கயிலை வாசா"** நாட்டிய நாடகம் அவை காண்கிறது திருக்கோணமலையின் சரித்திரச் சித்திரம் 'தமிழ் தமிழன்' என்ற சொல்லின் வேர்களை திருக்கோணமலை மண்ணோடு பத்திரப் படுத்திக் கொள்ளும் முயற்சி.

கதையின் கருச்சிதையாத வகையில் ஆடலை வடிவமைத்தல் நாட்டிய நாடகத்தின் முக்கிய அம்சம். ஒவ்வொரு பாத்திரப் படைப்பையும் அந்தந்தக் கதா பாத்திரமாக முன் நிறுத்தலே கதைக்கு உயிரானது. இதில் பலர் வெற்றி காண்பதில்லை.

பாத்திரத்தின் உயிர் கலைக்கப்படுவது கதையின் வேரைக் காயப்படுத்துவதாகும். இதை உணர்ந்து "ஆடல்" பயன்படுத்தப் படுதலிலேயே நெறியாளரின் ஆளுமையும், படைப்பின் வெற்றியும் தங்கியுள்ளது **"தென்கயிலை வாசா"** கதை வண்ணத்தை, கலா வண்ணமாக காட்டுமென நம்புகின்றோம். தென்கயிலை வாசனாம் கோணேசன், மாதுமையோடு அரங்கில் அருளட்டும். அவனருள் பொழிய ஆசிவழங்கி வாழ்த்துகிறேன்.

**சுவாமி. ஸ்வஸ்தானந்தா,**
ஸ்ரீ லலிதாம்பிகை தேவஸ்தானம்,
விளாங்குளமலை, கன்னியா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

நடராஜப் பெருமான் நர்த்தனத்தின் மூலமாக உலகை இயக்குகின்றார் என இந்து மதம் கூறுகின்றது. கலைகளுள் சிறந்ததாக பரதக்கலை விளங்குகின்றது. தமிழர் தம் பண்பாட்டுக் கருவூலமாகத் திகழும் கலைப்பணியினைத் தொடர்ந்து திருகோணமலைப் பிரதேசத்திலே இடையறாது வழங்கி வருகின்ற **இராஜரெட்ணம் நடனாலயம்** இவ்வருடம் (2014) அரங்கேறவிருக்கும் **"தென்கயிலை வாசா"** நாட்டிய நாடக நிகழ்விற்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமிதம் கொள்கிறேன்.

கோணைநாதர் வரலாற்றைக் கருவாகக் கொண்டமையவிருக்கும் இந்நாட்டிய நாடகத்தை நெறியாள்கை செய்யும் நாட்டியக் கலைமணி திருமதி.**ரேணுகாதேவி செல்வபுத்திரன்** அவர்களின் கலைத்தொண்டு தொடர இறைவன் அருள் கிடைக்க வேண்டுவதோடு பங்குபற்றும் அவரது **நடனாலய மாணவர்களையும் அணிசேர் கலைஞர்களையும்** பாராட்டுகின்றேன். மற்றும் இந்நிகழ்விற்கு பக்கபலமாக செயற்படும் சுவாமி **ஸ்வஸ்தானந்தா** அவர்களையும் அவரது இறைதொண்டும், கலைத்தொண்டும் தொடர்ந்து எமது பிரதேசத்தில் தொடர இறைவனை துதித்து விடைபெறுகிறேன். கலையை வளர்க்க அரும்பணியாற்றும் அனைத்து நல் உள்ளங்களுக்கும் எனது வாழ்த்துகள் உரித்தாகட்டும்.

**ந.விஜேந்திரன்**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
திருகோணமலை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



அனைத்து இயக்கங்களுக்கும் முழுமுதற் கடவுளாக விளங்கும் சிவபெருமான் இந்த உலகத்தில் உள்ளவர்களை இயக்கும் முகமாக படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களை பஞ்சகிருத்தியம் மூலமாக இயங்கிக்கொண்டு இருக்கின்றார். இதில் முகூர்த்தம் நடராஜப்பெருமான் ஆடி அருள்பாலித்த 108 தாண்டவங்களுள், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய தொழில்களை காளிகா தாண்டவம், கௌரி தாண்டவம், சம்ஹார தாண்டவம், திரிபுர தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம் என்ற ஐந்து தாண்டவங்கள் எடுத்துரைக்கின்றன.

பாவம், ராகம், தாளம் இவை மூன்றும் ஒருங்கே அமையப் பெற்றதுதான் பரதநாட்டியம். பரதநாட்டியம் தமிழர்களுடைய பாரம்பரிய கலை - கலாச்சார வரலாற்றைக் கொண்டுள்ளது. நீண்டகால வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழ் மொழியின் கலை கலாச்சாரத்தைக் கொண்ட பரதநாட்டியம் இன்று இந்தியாவில் மட்டுமல்ல, இலங்கையிலும் ஆர்வமுடன் பயிலப்பட்டு வருகின்றது. ஏன்! கடல் கடந்த நாடுகளிலும் இன்று பரதநாட்டியக் கலையை நம்மவர்கள் மட்டுமல்ல, மேலை நாட்டவர்களும் ஆர்வத்துடனும், அபிலாசையுடனும் கற்று வருகின்றார்கள்.

இவ்வாறான சிறப்புமிக்க பரதநாட்டியத்தைத் தனது குழந்தைப் பராயம் தொடக்கம் ஆர்வத்துடன் என்னிடம் பயின்றவர் தான் திருமதி. **ரேணுகாதேவி செல்வபுத்திரன்**. இவருக்கு சிறுவயதில் இருந்த ஆர்வமும், ஊக்கமும் எதிர்காலத்தில் இவர் சிறந்ததோர் **நடன நர்த்தகியாக** வருவார் என்று எடுத்துக்காட்டியது. ஒரு கட்டிடத்திற்கு பலமாகப் போடப்படும் அத்திவாரம் போல, என்னிடம் பயின்று கொண்ட முறையான ஆழமான பரதநாட்டியப் பயிற்சியின் தொடராக திருமதி.**ரேணுகாதேவி செல்வபுத்திரன்** யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இணைந்து நுண்கலைக் கல்வியை நான்கு ஆண்டுகள் முறையாகப் பயின்று "நாட்டியக் கலைமணிப்" பட்டத்தையும், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இணைந்து ஆசிரியர் பயிற்சியையும், தேசிய கல்வி நிறுவனத்தின் பயிற்சி நெறியைப் பயின்று "டிப்ளோமா" சான்றிதழையும் பெற்றுக்கொண்டார். இக்கால கட்டங்களில் திருமதி.லீலாம்பிகை செல்வராஜா, திருமதி.பதுமரஞ்சனி, திருமதி.சாந்தினி சிவனேசன், சாகித்ய சிரோண்மணி வீரமணி ஐயர் அவர்களிடமும் பரதநாட்டிய பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டார். அத்துடன் இந்தியா - தமிழ்நாட்டில் புகழ் பூத்த பரதநாட்டிய ஆசான் - அடையாறு **K.R.**லட்சுமணன் அவர்களிடமும் பரதநாட்டியத்தின் நுணுக்கங்களையும், நட்டுவாங்கப் பயிற்சிகளையும் பெற்றுக்கொண்டார். இவர் தனது முதல் ஆசிரியைப் பணியை 1985ம் ஆண்டு நாவலப்பிட்டி கதிரேசன் குமார வித்தியாலயத்தில் ஆரம்பித்து அதன்பின் 1991ம் ஆண்டு முதல் தி/சென்மேரிஸ் கல்லூரியில் தொடர்ந்து, அப் பாடசாலையிலேயே ஓய்வும் பெற்றுள்ளார்.

இவர் தன்னுடைய தந்தையார் இராஜரெட்ணத்தின் நினைவாக திருக்கோணமலையில் "இராஜரெட்ணம் நடனாலயம்" என்ற நடனப்பள்ளியை 1991ம் ஆண்டு உருவாக்கினார். உருவாக்கிய காலத்தில் ஓரே ஒரு மாணவியுடன் ஆரம்பிக்கப்பட்ட நடனாலயம் இன்று நூற்றுக்கணக்கான மாணவிகள் பரதநாட்டியம் பயிலும் ஓர் கலைக்கூடமாக திருக்கோணமலையில் தடம் பதித்துக் கொண்டிருக்கின்றது.

திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் தன்னுடைய உழைப்பின் காரணமாக 2009ம் ஆண்டு **இராஜரெட்ணம் நடனாலயத்தின்** பதினெட்டாவது ஆண்டை **"அபிநய சாதனா"** என்ற சிறப்புமலர் வெளியீட்டுடன் திருக்கோணமலை சென்மேரிஸ் கல்லூரியில் 10.01.2009 அன்று வெகு சிறப்பாக நடாத்தி முடித்தார். இராஜரெட்ணம் நடனாலயம் ஆரம்பிக்கப்பட்டு **23 வருட காலத்தில்** ஏராளமான மாணவிகளை இந்த நடனாலயத்தில் பயிற்றுவித்து க.பொ.த (சா/த) பரீட்சை, க.பொ.த.(உ/த) பரீட்சைகளிலும், வட இலங்கைச் சங்கீத சபையால் நடாத்தப்படும் பரதநாட்டியப் பரீட்சைகளிலும் சித்தியடைய வைத்துள்ளார். அத்துடன் தமிழ்த்தினப் போட்டிகளில், மாகாண மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் முதல் பரிசுகளை தன்னுடைய பாடசாலைக்குப் பெற்றுக் கொடுத்துள்ளார். அத்துடன் ரூபவாஹினி, சக்தி தொலைக்காட்சிகளிலும் ஏராளமான நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கி வந்துள்ளதுடன், சக்தி நிறுவனத்தால் நடாத்தப்பட்ட **Clasical** நட்சத்திரம் போட்டிகளிலும் தனது மாணவிகளை பங்குபற்ற வைத்து **வெற்றிகளை** தனதாக்கிக் கொண்டுள்ளார். இவ்வளவு வெற்றிகளையும், பரிசில்களையும் திருக்கோணமலை மண்ணுக்குப் பெற்றுக் கொடுத்த திருமதி.**ரேணுகாதேவி செல்வபுத்திரன்** பாராட்டப்பட வேண்டியவரே. ஆனால் பரத நாட்டியத்தின் மீது அவருக்கு இருந்த தாகமும் - மோகமும் அடங்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலையில் எழுந்தருளி இந்த உலகத்துக்கெல்லாம் அருள் பாலித்துக்கொண்டிருக்கும் எல்லாம் வல்ல மாதுமை அம்பாள் சமேத திருக்கோணேஸ்வரப் பெருமான் மீது எவருமே இதுவரையில் செய்ய முன்வராத ஓர் பணியை செய்வதற்கு முன்வந்தார் .இதன் பிரதிபலிப்புதான் இன்று இந்த அரங்கத்தில் அரங்கேறிக்கொண்டிருக்கும் **"தென்கயிலை வாசா"** என்ற நாட்டிய நாடகமாகும். எம்பெருமானுடைய பெருமைகளையும், திருவிளையாடல்களையும் எமக்கு கண்ணுக்கு விருந்தாகவும், காதுக்கு இனிமையாகவும், உள்ளத்திற்கு உணர்ச்சி பூர்வமாகவும் எடுத்து வழங்கிய திருமதி.ரேணுகாதேவி செல்வபுத்திரனையும் அவரது மாணவ-மாணவிகளையும் எல்லாம் வல்ல கோணேஸ்வரப் பெருமான் ஆசீர்வதிக்க வேண்டும் என்றும், இவருடைய பரதநாட்டியப்பணி தொடர்ந்து வளர்ச்சியடைய வேண்டும் என்றும் எம்பெருமான் பாதாரவிந்தங்களை வணங்கி வாழ்த்தி ஆசி கூறுகின்றேன்.

"கலாபூஷணம்" - "வித்தகர்" - "நாட்டிய வித்தகி"
திருமதி.**சாரதாதேவி சிறிஸ்கந்தராசா**
(இயக்குனர், திருக்கோணேஸ்வரர் நாட்டியக் கலாமன்றம்)
இல: 192/27, லோவர் வீதி, உவர்மலை, திருக்கோணமலை.





UNIVERSITY OF JAFFNA
LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



திருகோணமலையில் கடந்த இருபத்துமூன்று வருடங்களாக ஒரு முன்னணி நடனப் பள்ளியாக இயங்கி வருகின்ற **"இராஜரெட்ணம் நடனாலயம்"** கோணேசர் வரலாற்றைக் கூறுகின்ற **"தென்கயிலை வாசா"** என்ற நாட்டிய நாடகத்தை மேடையேற்றும் நிகழ்வு எம் எல்லோருக்குமே பெருமை தருவதாக இருக்கின்றது.

ஒரு சமூகம் அல்லது இனம் தனது வரலாற்றை நினைவுபடுத்திப் பார்ப்பது என்பது அவசியமானது. இவ்வாறு பார்ப்பதன் மூலமாகத்தான் எமது பாரம்பரியங்களின் பெருமைகளை நாம் தரிசிக்க முடிகின்றது. எமது முன்னோரின் ஏற்றங்களையும், பண்பாட்டுச் செழுமையையும், ஏன் வீழ்ச்சிகளையும் கூட இளந் தலைமுறையினரால் அறிந்துகொள்ள முடிகின்றது.

கடந்தகால அரசியல், சமூக, பண்பாட்டு, சமய வரலாற்று உண்மைகளை தரிசிப்பதன் ஊடாக நிகழ்கால, எதிர்கால வரலாறு செழுமையாகவும் பக்குவமாகவும் அமைவதற்கான தனி மனித, சமூக முனைப்புக்கள் ஏற்படுகின்றன என்பதை மறுக்க முடியாது.

இவ்வகையில், குடிதனை நெருக்கி பெருக்கமாய் தோன்றும் கோணமலையானின் வரலாற்றுச் சிறப்புக்களைத் தொகுத்து ஒரு நாட்டிய நாடகமாக தந்திருக்கின்ற இராஜரெட்ணம் நடனாலயத்தின் பொறுப்பாசிரியர் **திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன்** அவர்களைப் பாராட்டுகின்றேன்.

வரலாற்றை எழுத்தில் படைப்பதென்பதே கவனமாகச் செய்யப்பட வேண்டிய ஒரு பணியாகும். அதிலும் பாடல், இசை, நடனம், முதலிய அம்சங்களை இணைத்து ஒரு தலத்தின் வரலாற்றை நாட்டிய நாடகமாகத் தருவது என்பது பாராட்டப்படவேண்டிய ஒரு முயற்சியாகும்.

இந்த நாட்டிய நாடகத்தை தயாரித்து அளிக்கும் பொறுப்பாசிரியர் அவர்களுக்கும், பங்கு கொள்ளும் மாணவிகளுக்கும், ஆக்கத்தில் பங்கு கொண்ட ஏனைய கலைஞர்கள், உதவியாளர்கள் யாவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இராஜரெட்ணம் நடனாலயம் எதிர்காலத்திலும் இவ்வாறான வரலாற்றுப் பெருமைகளை வெளிப்படுத்தும் நாட்டிய நாடகங்களை ஆக்கி அளிக்கும் என்று நம்புகின்றேன்.

**சி.தண்டாயுதபாணி**
மாகாண சபை உறுப்பினர்,
எதிர்க்கட்சித்தலைவர்,
கிழக்கு மாகாண சபை,
திருகோணமலை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்தும் இறையாசீரும்

இராஜரட்ணம் நடனாலய ஆண்டு நிறைவை ஒட்டி வெளியாகும் சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மனித நாகரீக வரலாற்றிலே வாழ்வோடு பின்னிப் பிணைந்தவற்றிலே நாட்டியமும் ஒன்று என்றால் அது மிகையாகாது. தமிழக வரலாற்றின் பின்னணியில் கூட இயல் இசை நாடகம் என்பனவற்றோடு நடனக் கலைக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுவதைக் காணலாம்.

பரதநாட்டியக் கலையானது வெறுமனே ஒரு பொழுது போக்கு மட்டும் அல்ல. மாறாக இறைவனிடமிருந்து அருளப்படுகின்றதொரு தெய்வீகக்கலை என்றால் அதனை யாராலும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. அத்தகைய வெற்றி பெற்றதொரு நாட்டியக் கல்வி நிறுவனமாக இராஜரட்ணம் நடனாலயம் சமூகத்தில் தனது பணிகளை ஆற்றிக்கொண்டிருப்பதை நாம் அறிவோம். தான் இயங்கும் சமூகத்தின் ஆளுமை ஆற்றல் என்பவற்றின் அடையாளச் சின்னமாக இவ் நடனாலயம் திகழ்கின்றது என்றால் அது மிகையாகாது.

1991-ல் இராஜரட்ணம் நடனாலயம் ஆரம்பிக்கப்பட்டது. இவர்களுடைய இந்த நாட்டிய நடனாலயத்தோடு எனக்கு 1994-ல் இருந்தே தொடர்பு இருந்து வந்துள்ளது. அத்தோடு இவ் நாட்டியக்கலையை ரசித்தும் வந்துள்ளேன்.

நாட்டியக் கலைமாமணி, நாட்டிய வித்தகி, இசை நடனநவரத்னா, அபிநய ஆசான், போன்ற பட்டங்களைப் பெற்ற திருமதி. ரேணுகாதேவி செல்வப்புத்திரன் அவர்கள் கடந்த 23 ஆண்டுகளாக இவ் நாட்டியக் கலாலயத்தினை நடாத்தி வருகின்றார். கடந்த காலங்களைப் போலவே எதிர்காலத்திலும் கூட இவ் நடனக் கலாலயமானது சிறப்புற வளர நான் வாழ்த்துகின்றேன்.

இராஜரட்ணம் நாட்டிய நடனாலயம் வழியாக உருவாக்கப்பட்ட மாணவ மாணவிகள் இன்றும் நமது நாட்டில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் தங்களுடைய கலையின் ஆளுமையினை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர் என்பதை நான் வெளிநாடுகளில் கண்டு வியப்படைந்தேன்.

இறுதியாக இந் நாட்டியக்கலாலயத்தின் மூலமாக இளம் மாணவர்களின் திறமைகளை வளர்க்கவும் வெளிக்கொணரவும் ஒரு தூண்டுகோலாக இருக்குமென்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை. இவர்களுடைய பணி மென்மேலும் சிறப்படைய இறையாசீரையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அருட்கலாநிதி தேசமாண்ய
**ஜோர்ஜ் திசாநாயக்க** JP
மேய்ப்பு பணி நிலையம்,
உப்புவெளி, திருகோணமலை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை



வரலாற்று வளர்ப்புக்கள் வளர்க்கப்படுதல் இலக்கிய வளர்ச்சிக்கு இன்றியமையாததும், தொன்மையானதுமாகும். நவீன யுகத்தின் வளர்ச்சியில் அல்லது சமூக நீரோட்டத்தின் போக்கில் வரலாறுகள், பாரம்பரியங்கள் என்பன மறைந்து போகலாம் எனும் ஐயம் எல்லோரிடையேயும் மலிந்து கிடக்கின்றன.

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ் காலத்தால் அழியாச் சிறப்பைக் கொண்டுள்ளது. உலக வரலாறுகள், கலைகள் என்பவற்றை மக்கள் மனங்களில் பதித்துள்ளது. இல்லை பகிர்ந்து வளர்கின்றது என்பதே பொருத்தமாகும்.

நிலமேட்டின் உச்சியிலே
நிலை கொண்டிருக்கும்
கோணேசப் பெருமானின்
வரலாற்றையும்,
அதன் வழியில் திருகோணமலையின்
தொன்மையும் பெருமையையும்
பொக்கிஷங்களையும்
கலை நயத்தால் மூதுரைக்கும்
படைப்பிற்கு
ஆசியுரை வரைவதில் பெருமையடைகின்றேன்!

இவ்வேளை படைப்பாளி நாட்டியக் கலைமணி திருமதி.ரேணுகாதேவி செல்வபுத்திரன் பற்றிச் சில வரிகள் கூறுவது சாலப் பொருந்தும்.

திருகோணமலையில் 1991ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை இராஜரெட்ணம் நடனாலயத்தினூடே நாட்டியக் கலையின் புகழை நிலைபெறச் செய்கின்றார்.

பல விருதுகள் பாராட்டுகளுக்குச் சொந்தக்காரர் இதில் “ஜெயாஞ்சலி” எனும் விருது நுவரேலியா மாவட்ட ஜெயாஞ்சலி கலை நிறுவனத்தால், இவர் திருகோணமலை மாவட்டத்தில் நாட்டிய கலைக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி 2004ம் ஆண்டு கொடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மேலும் நாட்டியத் துறைக்கென தம்மையே அர்ப்பணித்து நாட்டிய விழாக்களை நாடாத்துவதுடன் நாட்டியம் சார் சிறப்பு மலர்களையும் வெளியிட்டுள்ளார்.

“பெருமையுடையவர் ஆற்றுவர் ஆற்றின் அருமை உடைய செயல்” அதாவது அரிய செயல்களை அவற்றிற்கு உரிய முறையான வழியில் செய்து முடிக்கும் திறமையுடையவர்கள் பெருமைக்குரியவராவர்கள். எனும் குறளுக்கொப்ப தனது கலைப் பணியில் தனக்கு மட்டுமல்லாது தன்னைச் சார்ந்த சமூகத்திற்குமே இவர் பெருமை சேர்க்கின்றார் என்பது இதனூடே தெளிவாகின்றது.

இவ்வரலாற்று நாட்டியச் சிறப்பு மலர் எம் பின்னோர் அ∴தே வளர்த்து வரும் சமூகத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டு என்பதுடன் ஒரு கலைப் பொக்கிஷமென்றால் மிகையாகாது.

இவ்வேளையில் இதில் பங்கெடுத்த, பங்கெடுக்கின்ற அனைவரையும் நினைவு கொள்கின்றேன். இவரின் ஆக்கமும் ஊக்கமும் செயல்களும் தொடர்ந்திட இறையாசீர் வேண்டி வாழ்த்துகின்றேன்.....

- நன்றி -

தூய குவாடலூப்பே திருத்தலம்
பங்குத்தந்தை **ச.ச யோன்பிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# A Message Of Felicitation

It gives me great pleasure to send this message of felicitation on the auspicious occasion of Rajaratnam Nadanalaya's Dance Drama presentation on the History of Koneswaram at St. Mery's College on 6th of September.

Koneswaram Temple is a Hindu Shiva Temple. It has a history way back to thousands of years. It is also considered as a **"Padal Petra Sthalam"** because Thirugnanasambanthar has sung thevarapathikam on this great temple. It is believed that King Ravana worshiped this Shiva and got all his powers. It is also believed that Arunagirinathar had praised the temple and considered to be the birth place of Pathanjali.

I am overjoyed that students of Rajaratnam Nadanalayam is performing this Dance Drama at a time when most of us are unaware of the History and great importance of this sacred Temple.

I have personally known Mrs Renukathevi Selvaputhiran, Director of Rajaratnam Nadanalaya for over 23 Years. She has been in the field of Bharatha Natyam for over 30 Years. She has studied under several teachers including Bramashri Veeramani iyer of Jaffna and Adayar Luxmanan of Tamil Nadu. She has won several awards, Gold Medals and commendations from various dignitaries.

I wish to congratulate the members of Rajaratnam Nadanalaya School, the Director MrsRenukathevi Selvaputhiran, her students and their parents for the hard work and dedication to promote this sacred art over three decades.

May Lord Nadaraja bless the organisation with continued growth and success.

**P Gnananandan**
Retired District Engineer
Eastern District, Sri Lanka Railways





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Message Of Felicitation



I consider it a great privileged to extend this message of felictationand appreciation to the souvenir bulletin of **"Then Kailai Vasa"**

The Rajeratnam Nadanalayam has set up a remarkable record of which you can br truly proud. The directors have imparted a legacy of hard work, discipline and commitment to the given task, to her students through the divine art of Baratham.

In this fast moving world of technology and the globalized life style of our society where all are hurried about and captered by individualism, But the directors has attracted the pupils heart to fashion their attitudes to higher values.

I congratulate Mrs.Renukadevi Selvaputhiran, staff and students of Rajeratnam Nadanalayam and ask God's blessings in abundances on the all. May God bless youy today and always.

**Sr. M. Nirosha A.C**
Principal
T/T/St. Mary's College.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிப்பா

காரஉலவு கனகமணிக் குன்றுறையும் கோணையப்பன் கடாட்சம் பெற்ற திருகோணமலைப் பதியில் பேர் பெறவே பிதாபெயரில் நடனாலயம் அமைத்து பெருமையுறு பரதக்கலை பயிற்றும் பெண்மணியே! ஆர்வமுடன் ஆடற்கலை அரிவையற்கு அறிவித்து அரங்கேற்றிப் புகழ் பெற்றாய். ஆண்டுகள் இருபத்து மூன்று சீர்பெருகு கோணேசர் திவ்யசரிதம் நாட்டிய நாடகமாய் சிற்சரீபசன் திருவருளால் சிறப்பாக அரங்கேறட்டும்.

வியன்மிகு வித்தையிலே விதவிதமாய் புத்தாக்கம் விருப்புடனே தேர்ந்தெடுத்து விறுவிறுப்பாய் மேடையேற அயராது உழைத்தாய். உருவான நிகழ்வதுவும் அர்ப்பணம் ஆகிறது ஆடவல்லான் அடியிணைக்கே முயற்சியால் முத்தமிழும் ஒருசேர முழங்கிறதே மூதிசமென நீபெற்ற கலையறிவுங் கற்பனையும் பயன்தருமே. பக்தியுடன் பரவசமாய்ப் பார்வையாளர் பரமகுரு கோணைநாதர் பதம்பணிந்து போற்றுவரே.

என்றுமே உன்வழி தனிவழி என்றறிவோம் ஏற்புடைய நல்லாக்கம் ஊக்கமொடு உழைப்பும் பொன்றாப் புகழ் சேர்க்கும் பூமியறி உண்மையிது போற்றுவார் போற்றிட புதுமைகள் நீ படைப்பாய் நன்றே நினைப்பாய் நினைத்தவை நலமீடேறும் நாட்டிய கலைமணியே! நாட்டிய வித்தகியே! நலம் வாழ்க! நீடுழி! குன்றுறையும் கோணையீசன் குறைவிலாது அருள்புரிவான் கூத்தனைப் பணிந்து கூறினோம் நல்லாசிகள்.


அன்புடன்

கலாபூசணம் செல்வி.**மணிமேகலை கார்த்திக்கேசு**

சங்கீத கலாவித்தகர் ஓய்வுநிலை ஆசிரியை.

24A, தேவாநகர், பிரதான வீதி, திருகோணமலை.








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



**சை**வ சமயத்தவர் முழுமுதற் கடவுளாக வழிபடும் சிவபெருமான் சக்தியோடு வீற்றிருந்து ஆன்மாக்களுக்குத் திருவருள் பாலித்து ஈடேற்றுமிடம் கைலாசம் எனக் கூறப்படுகின்றது. இது இந்தியாவின் வட எல்லையிலுள்ள இமய மலையில் உள்ளது. அது போலத் தெற்கே திருக்கோணமலையிலுள்ள சிவஸ்தலமும் கைலாசம் என அழைக்கப்படுகிறது. முன்னையது வடகைலாசம், பின்னையது தென்கைலாசம்.

இந்தியாவிற் போலவே இலங்கையிலும் நீண்ட காலமாகச் சைவ சமயம் நிலவி வந்துள்ளது. இங்குள்ள திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், முதலிய சிவஸ்தலங்கள் குறிப்பிடற்பாலன. இவற்றுள்ளே திருக்கோணேஸ்வர வரலாறு மிகப் பழமையானதாகும். புராதன காலத்தில் இலங்கையை ஆண்ட இராவணன் சிறந்த சிவ பக்தன், அவனுடைய காலத்துடனும் இத்தல வரலாறு தொடங்குவதாகக் கருதப்படுகின்றது. தொடர்ந்து பல அரசர்களும் ஞானிகளும் இத்தலத்திலே திருத்தொண்டுகள் செய்து வந்துள்ளனர். சைவ நாயன்மார்களில் ஒருவரான திருஞானசம்பந்தர் இத் திருத்தலம் பற்றி ஒரு பதிகம் பாடி இறைவனைப் போற்றியுள்ளார். இத்தலச் சிறப்புப் பற்றித் தமிழிலே இரண்டு புராணங்களும் வடமொழியில் ஒரு புராணமும் சிறப்பித்துப் போற்றுகின்றன. குளக்கோட்டன் எனும் புகழ் பெற்ற சைவ மன்னனும், பின்னர் யாழ்ப்பாணத்திலாட்சி செய்த தமிழ் மன்னர்களும் இக்கோயிலுக்குத் தொண்டுகள் செய்துள்ளனர். பின்னர் 16ம் நூற்றாண்டில் இலங்கையின் கரையோர மாகாணங்களைக் கைப்பற்றிய போர்த்துக்கீசர் இப் பெரிய கோவிலைக் கண்டு வியப்புற்றனர். அதன் வரைபடம் ஒன்றினைச் செய்து கோயிலைத் தரைமட்டமாக்கினர். அதன் சில பகுதிகள் கடலுக்குள்ளே எறியப்பட்டன.

ஆழ்கடல் ஆய்வின் விளைவாகப் பழைய கோயிலின் உடைந்த பகுதிகளும், சில சிலைகளும் மீட்கப்பட்டன. இவைகளைப்பற்றிக் கலாநிதி பாலேந்திரா **தமிழர் பண்பாடு (Tamil Culture)** எனும் சஞ்சிகையிலே ஒரு உபயோகமான கட்டுரை எழுதியுள்ளார்.

போர்த்துக்கீசர் செய்த அழிவுக்குப் பின்னரும் கோயில் பல அன்பர்களாலே தொடர்ந்து படிப்படியாக மீள அமைக்கப்பட்டது. திருப்பணிகள் இந்த நூற்றாண்டு வரை நடைபெற்று வந்துள்ளன.

இக் கோயில் பற்றி ஏற்கனவே குறிப்பிட்ட நூல்கள், பதிகம் முதலியவற்றுடன் தனிப்பட்ட கவிதைகள், பாடல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட வரலாற்று அம்சங்களுடன் இசை, நடனம், நாடகம் முதலிய கலைகளையும் ஒன்றிணைத்துத் **"தென்கயிலை வாசா"** எனும் தலைப்பிலான நாட்டிய நாடகமொன்றினைத் திருகோணமலையைச் சேர்ந்தவரும், இலங்கையிலுள்ள ஒரு பிரபலமான பரதக் கலைஞருமான திருமதி.**ரேணுகாதேவி செல்வபுத்திரன்** தயாரித்து விரைவில் அரங்கிலே நிகழ்த்தவுள்ளார். புதிய கலைப்பரிமாணம் கொண்ட கலை ஆக்கம் இது. இப் பரதக்கலைஞர் தன்னுடைய நடனக் கலைக்கான அறிவினையும், பயிற்சியையும் இலங்கையிலும், இந்தியாவிலும் பெற்றார். பல ஆண்டுகளாக நடன மணிகளை பாடசாலைகளிலும் அருமைத் தகப்பனின் நினைவாகச் சொந்த ஊரிலே 1991ல் உருவாக்கிப் புகழ் பெற்று வருகிறார். இத்தகைய நாட்டிய நாடகத்தினை உருவாக்கி ஆற்றுகை செய்வதற்கு இவர் எல்லா வகையிலும் தகைமை வாய்ந்தவர். இவருடைய செயற்பாடுகளுக்கு இவருடைய அன்புக்கணவரும், உறவினரும், மாணவர்களும், அவர்களின் பெற்றோரும், நலன் விரும்பிகளும் சக ஆசிரியர்களும் அனுசரணையாக ஊக்கமளித்து வருவது பாராட்டிற்குரியது.

கலைப்பற்று, தமிழ்ப்பற்று, சமயப்பற்று, நாட்டுப்பற்று முதலியன முரணின்றி ஒன்றிணைந்து விளங்கும் இக்கலைப் படைப்பு இன்றைய காலகட்டத்திலே குறிப்பாக இளம் சந்ததியினருக்கும், ஆர்வலருக்கும், ஏனையோருக்கும் நன்கு பயன் உள்ளதாக விளங்கும். ஒருவகையில் இத்தகைய கலை ஆக்கங்கள் காலத்தின் தேவையாகும். என்னுடைய அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய முன்னாள் மாணவி திருமதி. **ரேணுகாதேவிக்கும்** அவரின் அன்புக்கணவருக்கும், அனுசரணையாளர் அனைவருக்கும் மனப்பூர்வமான வாழ்த்துக்களைக் கூற விரும்புகிறேன். மேலும் இப்பரதக் கலைஞர்களை ஆக்கங்களை உருவாக்கிச் சிறப்படையவும், இவரும் இவரின் அன்புக்கணவரும் தொடர்ந்து நன்கு செயலாற்றவும், இவர்கள் நீண்ட காலமாக நோய் பிணி இன்றி பல வசதிகளைப் பெற்று விளங்கவும் எல்லாம் வல்ல மாதுமையம்மையோடு கூடிய கோணேஸ்வரப் பெருமான் அவர்களுக்குத் திருவருள் பாலிப்பாராக.

**கலாநிதி வ.சிவசாமி**
ஓய்வுபெற்ற பேராசிரியரும்,
சமஸ்கிருதத் துறைத் தலைவரும்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

பாரத தேச மகா புலவர் பரத முனியின் கருத்துகளுக்கேற்ப யாதேனுமொரு சந்தர்ப்பத்தை பாவனை செய்து காட்டுவதே நாடகமென அழைக்கப்படுகிறது. இதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் அவரால் எழுதப்பட்டுள்ள "நாட்டிய சாஸ்திர" நூலில் **"அவஸ்தானு க்ருதீர் நாட்டியம்"** என இதனை குறிப்பிட்டுள்ளார். இலக்கியம், இசை, நடனம், ஓவிய சிற்பம் போன்ற அனேகமான நுண்கலை விடயங்களின் குறிக்கோளாக இருப்பதும், நடைபெற்ற, நடைபெறுகின்ற அல்லது நடைபெறக் கூடிய ஒரு சம்பவத்தை அந்தந்தக் கலைஞனின் ஆன்மீக சங்கற்பங்களுடன் கலந்து சமூக மயப்படுத்துவதாகும். அதனூடாக எளிதில் உணர்ச்சி வயப்படக் கூடிய மற்றும் ஞானம் நிரம்பிய ஒரு சமுதாயம் உருவாகுமாயின் கலைப் படைப்பு போலவே கலைஞனும் உதயமாகின்றான்.

நடனக் கலை, உலகத்தில் மிக நீண்ட வரலாற்றை பெற்றிருக்கும் கலையாகும். இது இன்றைய தினத்தில் மிக முன்னேற்றமான நிலையை அடைந்துள்ளது. கீழைத்தேய மற்றும் மேலத்தேய திசைகளை சார்ந்த ஒவ்வொரு நாட்டுக்குரிய நடைகளைக் கொண்டு வளர்ச்சியடைந்திருக்கும் நடனங்களால் மனித உள்ளங்களை மகிழ்விப்பதோடு இனங்களின் கலாசார மற்றும் அபிவிருத்தி சந்தர்ப்பங்களும் இத்தால் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இலங்கை சம காலமாகின்ற போது நடன துறையில் ஒரு குறிப்பிடத்தக்க பயணம் வந்திருப்பதை காணலாம்.

நுண்கலைகள் பற்றிய பரந்த அறிவு, பகுத்தறிவு மற்றும் செயன்முறையினை வளர்ப்பதும் இலங்கை குடி மக்களிடையில் கலைப்பணிகளை கொண்டு செல்வதும் நுண்கலை வளர்ச்சியின் சேவையினை முன்னேற்றத்திற்காக செயற்படுவதையிட்டு திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்களின் "இராஜரெட்ணம் நடனாலயம்" கலை நிறுவனத்திற்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்களின் கலைப்பணி மேலும் சிறந்து விளங்க எல்லாம்வல்ல இறைவனின் அருள் கிடைக்க வேண்டுவதுடன், **"தென்கயிலை வாசா"** நாட்டிய நாடகம் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற வாழ்த்துகின்றேன்.

- நன்றி -

**விஜித் கனுகல**
பணிப்பாளர்
கலாசார அலுவல்கள் திணைக்களம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை




கலைகளுட் சிறந்தது நடனக் கலை எனில் மிகையாகாது. பரதக் கலையை தமிழகத்திற்குச் சென்று வந்த சில நடன விற்பன்னர்களால் இக் கலை இலங்கையிலும் பரவியுள்ளது.

அவ்வகையில் திருமதி.ரேணுகாதேவி செல்வபுத்திரனின் நிறுவனமாகிய இராஜரெட்ணம் நடனாலயமும் நாட்டியக் கலைக்கு தனது பங்களிப்பினை நல்கி வருகின்றது. கால்நூற்றாண்டு காலப் பணியைப் பூர்த்தி செய்துள்ள இவர் எதிர்வரும் 06.09.2014 ல் "தென்கயிலை வாசா" என்னும் புதிய படைப்பினை அரங்கிற்குக் கொண்டு வந்துள்ளார். திருமதி.ரேணுகாதேவி செல்வபுத்திரன் இதுவரை காலமும் பல நடன நிகழ்ச்சிகளை மேடையேற்றியுள்ளார். இவர் 1983ம் ஆண்டு நாட்டியக் கலைமணி எனும் பட்டத்தைப் பெற்றார். 1999ம் ஆண்டில் தொண்டைமான் அவர்களுடைய சிறப்பு விருதினையும் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் விருதினையும் 2004-ல் ஜெயாஞ்சலி நாட்டிய விருதினையும் பெற்றுள்ளார். திறமையும், கற்பித்தல் ஆற்றலும் நிறைந்தவர்.

இவரது நாட்டியப் பணி மென்மேலும் வளர வேண்டும் என எல்லாம் வல்ல நடராஜப் பெருமானை இறைஞ்சுகின்றேன்.

அன்புடன்
**லீலாம்பிகை செல்வராஜா**



**பண்ணால் சொல்லும் பொருளைப்**
**பாவ ராக தாளத்தோடு**
**கண்ணால் காட்டும் கலையே**
**நடனக்கலை**

– உடுமலை நாராயணன் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

235.1 TEN AR

திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்களின் நாட்டியப்பள்ளியான **இராஜரெட்ணம் நடனாலயத்தின்** ஆண்டு நிறைவு விழாவையொட்டிய கலை நிகழ்விற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்கள் யாழ்/இராமநாதன் நுண்கலைக் கல்லூரி நடனத்துறைப் பட்டதாரியாவார். அவர் திருகோணமலையில் ஆசிரிய நியமனம் கிடைத்து அங்கேயே நீண்ட காலம் கடமையாற்றியவர். அத்துடன் விருப்பின் காரணமாகத் தந்தையார் பேரிலேயே நடனப்பள்ளி ஒன்றை ஆரம்பித்து இன்று வரை மாணவர்களுக்குப் பிரத்தியேகமாகப் பயிற்சி கொடுத்து வருகின்றார். அவரிடம் பயின்ற மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி யாழ்/இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் பயின்று வருகின்றார்கள். அவரிடம் பயிலும் மாணவர்கள் நல்ல அடவு, அங்கசுத்தம் உடையவர்கள். தனது கற்பித்தல் திறமையினால் மாணவர்களைச் சிறந்த முறையில் உருவாக்கி வருகிறார். அவரின் மாணவர்களை இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் பார்த்திருக்கிறேன். நல்ல ஆசானாய், நல்ல வழிகாட்டியாய்ச் சிறந்த பயிற்சி கொடுத்துவருகிறார். அவரது சிறந்த சேவையைப் பாராட்டி அனேக நிறுவனங்கள் பட்டங்கள் வழங்கி கௌரவித்திருக்கின்றது. அந்த வகையில் இம்முறை திருக்கோணேஸ்வர நாதர் தலவரலாற்றினை நிருத்திய நாடகமாகத் தயாரித்து அளிக்கை செய்ய இருப்பதாக அறிகிறேன். கலைகள் பயின்று நிறைவில் ஆற்றுகை செய்யப்பட வேண்டும் அப்போதுதான் கலை சமூகம் மத்தியில் இனம் காட்டப்படுகின்றது அத்துடன் அங்கீகாரம் கிடைக்கின்றது. அப்போதுதான் கலையும் பூரணத்துவம் அடைகிறது.

எனவே தன்னிடம் பயிலும் நடன மாணவிகளை சேர்த்து இம்மாதிரியான நிருத்திய நாடகத்தை அரங்கேற்ற இருப்பது வரவேற்கத்தக்க விடயம். அவரது சிந்தனை நிறைவேறவும், முயற்சி திருவினையாக்கவும் எல்லாம் வல்ல கோணேஸ்வர நாதன் திருவருள் பாலிக்க வேண்டி என் நல்வாழ்த்துக்களை வழங்குகின்றேன்.



ARCHIVES

**"வாழ்க கலை........ வளர்க நம் கலைப்பாரம்பரியம்"**


**கலாகீர்த்தி ஸ்ரீமதி. சாந்தினி சிவநேசன்**
ஓய்வு நிலை விரிவுரையாளர்
வருகை விரிவுரையாளர்
யாழ்/இராமநாதன் நுண்கலைக் கல்லூரி


204206





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



கீழைத்தேசக் கலைகள் எல்லாமே சமயத்துடன் மிக இறுக்கமான பிணைப்பைக் கொண்டவை. அவற்றுள் இந்துப் பண்பாட்டில் முகிழ்ந்த நுண்கலைகள் எல்லாம் இறையியலுடன் மிக நெருக்கமான தன்மையில்தான் மரபு வழியாகப் பயிலப்பட்டு இன்றும் அவை இறை வழிபாட்டுடன் ஆன்மீக சிந்தனையைத் தூண்டும் ஊடகங்களாக மிளிர்கின்றன. இந் நுண் கலைகளுள் ஆடற்கலை தெய்வீகக் கலை எனப் போற்றி பெருமைப் படுத்தப்படும் தனிச்சிறப்பு வாய்ந்தது என்றால் அது மிகையாகாது. சைவர்கள் இறைவனையே ஆடல் வல்லனாகப் போற்றி வழிபடுவதோடு அல்லாமல் ஆடல் வல்லானின் ஆடல் தோற்றம், நடராஜ வடிவம், கூத்து வகைகள், நடனநிலைகள் என்பவற்றின் வாயிலாக இறை தத்துவத்தையே விளக்கும் அதியுயர் கலையாக ஆடற்கலைக்குப் பெருமை சேர்த்துள்ளார்கள்.

இந்த வகையில் திருக்கோணமலை இராஜரெட்ணம் நடனாலயம் தயாரித்து வழங்கும் **"தென்கயிலை வாசா"** என்ற நாட்டிய நாடகம் நாட்டியத்தினூடு திருக்கோணேஸ்வரர் ஆலய வரலாற்றைப் பறைசாற்றும் வரலாறு பேணும் நிகழ்வு என்பதில் ஐயமில்லை. இன்றைய சூழ்நிலையில் வரலாறுகள் மழுங்கடிக்கப்பட்டும் காலகட்டத்தில் நம்மவர் மத்தியில் திருக்கோணேஸ்வரப் பெருமான் சந்நிதி பற்றிய வரலாற்றுண்மையை எடுத்தியம்ப வேண்டிய தேவையை நாட்டிய நாடகத்தினூடாக உணர்த்த விளைந்த அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். இந் நாட்டிய நாடகத்திற்கு எழுத்தாக்கம் செய்த சுவாமி ஸ்வஸ்தானந்தா அவர்களின் பணி திருக்கோணமலை வாழ் மக்களுக்கு ஒருவரப்பிரசாதம். நாட்டியக் கலைமணி, நாட்டிய வித்தகி, இசைநடன நவரத்தினா, அபிநய ஆசான் போன்ற பட்டங்களைப் பெற்ற திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்கள் இந் நாட்டிய நாடகத்தினை பல மாணவர்களைப் பங்குபெற வைத்து தயாரித்து வழங்குகிறார் என்று அறிகிறேன். மிக்க மகிழ்ச்சி. இறைவன் அளித்த பரதக் கலையை பயின்று பயிற்றுவித்து இறை ஆலய வரலாறு செப்பும் நாட்டிய நாடகமாக ஆக்கம் செய்த திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்கள் மெச்சப்பட வேண்டியவர்.



இந்நாட்டிய நாடகம் சிறப்பாக நடைபெற அதில் பங்குபற்றும் அனைவரும் இறை உணர்வு மேலோங்க பார்வையாளர் திருக்கோணேஸ்வரப் பெருமானை மனக் கண்ணில் தரிசிக்க எல்லாம் வல்ல கோணேஸ்வரத்து ஈசன் துணைபுரிவானாக.

**வாழ்க பரதக் கலை! வளர்க இராஜரெட்ணம் நடனாலயம்! வாழிய ரேணுகாதேவியின் கலைப்பணி!**

கலாநிதி. (Dr) **கிருஷாந்தி இரவீந்திரா**
இயக்குனர், நாட்டியகலாகேந்திரா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## போற்றுதற்குரிய முயற்சி சிறக்கட்டும்!

உலகத்தின் உய்வுக்காய் உதித்தது நம் தமிழ்மொழி.
இவ் அரும் தமிழ் மொழியை,
இயல், இசை, நாடகம் என முத்தமிழாய் வகுத்தனர் நம் ஆன்றோர்.
இம்முத்தமிழும்,
உலகியல் அறிவை நல்கும் மற்றைய மொழிகள் போல் அல்லாமல்,
நம்மை இறைவனிடம் சேர்ப்பிக்கும் வல்லமை கொண்டன.
இவற்றுள் நாடகத்தமிழ் அனைவரையும் ஈர்க்க வல்லது.
இந் நாடகத் தமிழின் ஓர் உயர் நிலை வடிவமே பரத நாட்டியம்
இத்தகு சிறப்பு மிக்க பரதக்கலையை நம் ஈழமண் பலகாலம் போற்றி வருகிறது.
திருகோணமலையில் **திருமதி. ரேணுகாதேவி** அவர்களால் நடாத்தப்படும்,
**இராஜரெட்ணம் நடனாலயம்** நிறுவனம்,
பலகாலமாய்ப் பெரும் கலைப்பணி ஆற்றி வருகிறது.
1991ம் ஆண்டு தொடங்கிய இந்நிறுவனத்தின்,
ஆசிரியராகவும், ஸ்தாபகராகவும் விளங்குவர்,
நாட்டியக்கலைமணி **திருமதி.ரேணுகாதேவி செல்வபுத்திரன்** அவர்கள்
அறிவும், ஆற்றலும், அடக்கமும் மிக்க இவரது நெறிகாட்டலில்,
இவ் ஆண்டு கோணேஸ்வரர் வரலாறு,
"**தென்கயிலை வாசா**"எனும் பெயரில்,
நாட்டிய நாடகமாக்கப்படுவதை அறிந்து பெருமகிழ்வு அடைகிறேன்.
இந்நிறுவனம் நடாத்த இருக்கும் இந்நாட்டிய நிகழ்வு சிறக்க,
என்னை வாழ்விக்கும் கவிச்சக்கரவர்த்தி கம்பநாடன்,
பாடிப்பரவும் பரம்பொருளை வேண்டிப் பணிகின்றேன்.
"இன்பமே எந்நாளும் துன்பமில்லை"

கம்பவாரிதி **இ.ஜெயராஜ்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



கலைகளிலே மிகவும் உன்னதமான கலையாக "பரதக்கலை போற்றப்பட்டு வருகின்றது. பாரத நாட்டிலே தோற்றம் பெற்று இன்று உலக நாடெங்கும் கொடி கட்டிப் பரந்து கொண்டிருக்கும் இப்பரதக்கலை தெய்வாம்சம் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இக் கலையின் தனிப் பெரும் வித்தகனாக "ஆடற்கரசன்" நடராஜ பெருமான் விளங்குகின்றான் இக் கலை ஆன்மீக ஈடேற்றத்திற்கு ஓர் வழிகாட்டியாகும் பக்தி, புனிதம், கட்டுக்கோப்பு என்பவற்றை தன்னகத்தே கொண்டு கண்ணிற்கும், கருத்திற்கும் நல் விருந்தாய் விளங்கவல்லது.

இக் கலையானது நிருத்தம், திருத்தியம், நாட்டியம் என்ற உட்பிரிவைக் கொண்டது. இன்று நாட்டியம் என்ற பிரிவில் "தென்கயிலை வாசா" என்ற ஸ்தலபுராணம் நாட்டிய நாடகமாக நிறைவேற்றுவதை குறித்து என் மனம் பூரிப்படைகிறது.

ஸ்தல புராணங்கள் புத்தகங்களாக வெளிவந்துள்ளன, வந்து கொண்டும் இருக்கின்றன, இவை மக்களிடையே சென்றடையும் தன்மை, காலம் குறைவாகும். இதுவே நாட்டிய நாடகமாக காட்சிப்படுத்தும் பொழுது துரித கதியில் பசுமரத்தாணி போல் சென்றடைகிறது என்பது கண்கூடு.

திருஞானசம்பந்தரால் தேவாரப் பதிகம் பாடப்பட்ட பெருமை மிக்க கோணேஸ்வரநாதர் மாதுமை அம்மையின் வரலாற்றினை நாட்டிய நாடகமாக காட்சிப்படுத்தும் திருமதி.ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்களின் கலைச்சேவை, சமயத் தொண்டு, அவற்றின்மேல் கொண்டுள்ள ஈடுபாடு பாராட்டப்பட வேண்டிய அம்சமாகும். எமது ஈழத்திருநாட்டில் முதன் முதலாக ஸ்தல புராணத்தை நாட்டிய நாடகமாக மேடை ஏற்றும் பெருமை திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்களைச் சாரும். இலங்கை நாட்டிய வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டிய அம்சமாக இதனை நான் கருதுகின்றேன்.



இவரது சிறந்த படைப்புகள் வெளிவர வேண்டும் சிறப்பான கலை சேவை தொடர வேண்டுமென வாழ்த்தி தில்லைக் கூத்தன் நடராஜப் பொருமான் தாழ்பணிந்து ஆசி கூறி நிற்கின்றேன்.

**" வாழ்வு சிறிது வளர் கலை பெரிது"**

பரதசூடாமணி சங்கீத வித்துவான்
**ஸ்ரீமதி.வைஜயந்திமாலா செல்வரட்ணம்**
ஸ்ரீ ஷங்கர நர்த்தாலயா, கண்டி.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

திருக்கோணேஸ்வரம், தெட்ஷணகயிலாசம், கோகர்ணம் என்றெல்லாம் வரலாற்று ஆசிரியர்களாலும் புராண இதிகாசங்களாலும் புகழ்ந்துரைக்கப்படும் கோணேஸ்வரம் என்னும் பண்பாட்டு அடையாளம் இலங்கையில் வாழ்ந்துவரும் பூர்வீக சைவ மக்களின் வழிபாட்டுத் தலமாக மாத்திரமின்றி கிழக்கிலங்கையின் வாழ்வியல் நெறிகளையும் கலை இலக்கியம் மற்றும் பாரம்பரியங்களின் பிறப்பிடமாகவும் பல நூறு வருடங்களுக்கு முன்பிருந்தே இருந்து வந்துள்ளது என்பதை சுட்டிக்காட்டும் அடையாள சின்னமாக விளங்குகின்றது.

இவ்வாலயம் அதன் தொன்மை, மேன்மை பற்றியெல்லாம் தெட்ஷண கயிலாய மகாத்மியம், தெட்ஷண கயிலாய புராணம், திரிகோணாசல புராணம், கோணமலை அந்தாதி, கோணேசர் கல்வெட்டு போன்றவையும், பல்வேறு கல்வெட்டுக்களும், வரலாற்று நூல்களும் தெரிவிக்கின்ற செய்திகளின் அடிப்படையில் ஈழத்தின் மூத்த ஈஸ்வரங்களில் ஒன்றாக இது மதிக்கப்படுகிறது. பாண்டிய மன்னர் காலம், பல்லவர் ஆட்சிக் காலம், சோழராட்சியக் காலம் என்ற எல்லாக்கால வரலாற்றுடனும் தொடர்பு பட்டதாய், குளக்கோட்ட மன்னன், கஜபாகு வேந்தன், சோழங்கன், மகாசேனன், ஆடகசௌந்தரி என்ற வரலாற்று நாயகர்களாலும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்ற நவீன நாடுபிடி வாதிகளாலும் கவனத்தில் கொள்ளப்பட்ட இவ்வாலயத்தின் பெருமையைச் சிறப்பிக்கும் வகையில் பரதக்கலையின் நவீன உத்தியெனப்படும் நாட்டிய நாடகம் என்றவகையில் இராஜரெட்ணம் நடனாலய மாணவிகளால் தயாரிக்கப்பட்டு மேடை காணும் கோணேஸ்வர ஆலய வரலாற்று வடிவில் உருவாக்கப்பட்டிருக்கும் இந்நிகழ்வு வரலாற்று முத்திரை கொண்டது.

கோணேஸ்வரர் ஆலயத்திற்கும் நடனத்திற்குமிடையே நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை கோணேசர் கல்வெட்டு தெளிவுபட உரைக்கும்.

**செய்ய நடன ஸ்திரீக்கு முட்டு வகை**
**கொட்ட லொடு சிறக்கப் பாடல்**
**ஐயமற நற்பலிக்கும் பாவாடை**
**இடுவதுவும் அதுவேயன்றித்**
**துய்ய சுண்ணம் கொடி யேற்றல்**
**இறக்கவோடு சுமத்தலும் சாந்தரைத் தேய்தல்**
**மெய்யெனவே ஆலயத்துட் பணிகளை**
**துப்பரவாக விளங்க செய்வீர்** (கோ. க 190)

இவ்வாலயத்தில் நடனமண்டபம், தர்க்க மண்டபம், ஓலக்கம் சங்கப்பலகை போன்ற இன்னோரன்ன மூலகங்கள் மூலம் பரதக்கலையும் ஏனைய கலைகளும் வளர்க்கப் பட்டதென அறியப்படுகின்றது. புராதன மனிதனின் அசைவு நெளிவுகளிலிருந்து நடனம் உருப்பெற்றது என்பர். இந்த நடனக்கலை உலகின் பல பாகங்களிலும் வெவ்வேறு வடிவிலும் வகையிலும் நிலவி வளர்ந்து வந்துள்ளது. புராதன எகிப்திய, சுமேரிய, இந்திய, சீன நாகரீகங்களிலே நடனக்கலை முக்கிய இடம்பெற்று விளங்கி வந்துள்ளது. இந்திய சாஸ்திரிய இசை போன்று சாஸ்திரிய நடனமும் வளர்ந்து வந்துள்ளது. பரதம் என்ற சொல் அண்மையில் ஏற்பட்ட வரலாற்று மாற்றுச் சொல். இந்து சமுதாயத்தில் வழங்கி வருகின்ற நடனங்களிலே பரதம் முதன்மை வாய்ந்தது என்பர். பரத முனிவரால் எழுதப் பெற்ற நாட்டிய சாஸ்திரத்தை ஆதாரமாகக் கொண்டது. பாவம், ராகம், தாளம் என்பவற்றை உள்ளடக்கிருப்பதால் இது பரதம் என்று அழைக்கப்படும். பரதநாட்டியம் அபிநயம், நிருத்தம், கீதம், வாத்தியம் முதலான அம்சங்களைக் கொண்டது.

இந்திய வரலாற்றில் சங்க காலம், பல்லவர் காலம் சோழப் பேரரசு காலம், விஜய நகர காலம் எனப் பல பரிமாணங்களைக் கொண்டு வளர்ந்து பின்னர் தஞ்சை நால்வர் அன்னா பவ்லோவா வாமேதி அம்மையார் ஆனந்தகுமார சுவாமி போன்ற மேதைகளால் புதிய இலக்கணம் வகுக்கப்பட்டு பின்னர் இக்காலத்தில் பந்தனை நல்லூர் பாணி வளுவூர் பாணி யென கிளை கொண்டு பரதம் வளர்ந்து வருவதுடன் கேரளத்தின் கதகளி நடனம், தெலுங்கு தேசத்தின் குச்சுப்புடி நடனம், கர்நாடக யக்ஷ கானம், மணிப்புரியின் மணிப்புரி நடனம், ஒரிஸ்ஸா மாநிலத்திற்குரிய ஒடிசி நடனம் என சகோதர வாண்மை பெற்று விளங்குகின்றன. இவ்வகை நடனங்களின் தார தம்மியங்களை விளங்கிக் கொண்டு உத்தம கலையான பரத நாட்டியத்தை தன் ஆன்மீகக் கலையாகப் போற்றி அதை வளர்த்து வரும் நடன மா- நர்த்தகி திருமதி.ரேணுகாதேவி செல்வபுத்திரனின் ஆதாயமயமான கலைச்சேவை காலப் பெட்டகத்திற்குள் பாதுகாக்கப்பட வேண்டியவை. கலை கடவுளின் இருப்பிடம் கலை காலத்தின் படைப்பு கலை வாழ்க்கையின் ஒரு வண்ண வடிவம் அந்த உன்னத கலையை வளர்த்து வரும் நர்மதை ரேணுகாதேவியும் அவரின் பிரமத்தயாரிப்புக்களும் அவரின் குருகுல மாணவிகளின் புகழும் என்றும் நித்தியம் பெற கோணேசர் அருள் புரிவார்.

**திருமலை. நவம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



நாட்டியக் கலைமணி திருமதி.ரேணுகாதேவி செல்வபுத்திரன் கடந்த 03 தசாப்தங்களாக நாட்டியக் கலையூடாக தனது சேவையை ஆற்றி வருகின்றார். அவருடைய நெறியாள்கையில் இயங்கும் திருகோணமலை இராஜரெட்ணம் நடனாலயம் வழங்கும் "தென்கயிலை வாசா" என்ற திருக்கோணேஸ்வரம் வரலாறு கூறும் நாட்டிய நாடகம் அரங்கம் காண்பதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். திருமதி.ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்கள் நடனத் துறையில் ஆற்றலும், அர்ப்பணிப்பும் மிக்க ஒரு நடனக் கலைஞரும், நடன ஆசிரியையுமாவார். அவருடைய மாணவ மாணவியர் பங்கு கொண்ட பல சிறப்பான நிகழ்ச்சிகளை நான் பார்த்துள்ளேன். பல மேடைகளில் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் இடம்பெற்ற அவருடைய கற்பனைத் திறனுடன் கூடிய புதிய பல நடன ஆக்கங்கள் நல்ல கலைப் படைப்புகளாக இன்றும் எம் மனதில் நிற்கின்றன. அவருடைய நடன அமைப்பில் உருவாகும் திருக்கோணேஸ்வரம் வரலாறு கூறும் "தென்கயிலை வாசா" என்ற நாட்டிய நாடகம் கலையழகு நிறைந்ததாக நேர்த்தியுடன் படைக்கப்படும் நல்விருந்தாக நிச்சயமாக அமையும் என்று நான் எதிர் பார்க்கின்றேன். திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் மற்றும் அவரது நிறுவகத்தின் கலைஞர்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்கின்றேன்.

**எஸ். விஸ்வநாதன்**
சிரேஸ்ட ஒளிபரப்பாளர், ஊடகத்துறை விரிவுரையாளர்,
தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், ஆலோசகர்,
இயக்குனர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

பரத நாட்டியம் ஒரு தெய்வீகக் கலை. இக்கலையானது கடவுள் மீதான மனிதனின் பக்தியை உள்ளடக்கியதும் அழகு மற்றும் மகிழ்ச்சி ஆகியன மனதில் பூத்து குலுங்குகின்ற உயர் கலைத்துவ முறையாகும்.

நாட்டிய கலைமணி திருமதி.ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்கள் கடந்த 30 ஆண்டு காலமாக திருமலை மண்ணில் இராஜரெட்ணம் நடனாலயம் வாயிலாக பல நடன மணிகளை உருவாக்கியுள்ளார். கலைக்கான இவரது 30 வருட பயணத்தில் இவர் பல பட்டங்களையும் விருதுகளையும் பெற்றுள்ளதுடன் கலை உலகில் தனக்கென ஒரு இடத்தையும் பெற்றுள்ளார்.

இராஜரெட்ணம் நடனாலயம் 3 தசாப்தங்களை நிறைவு செய்கின்றமையை ஒட்டி இன்று நடைபெறவிருக்கும் தென்கயிலை வாசா எனும் நாட்டிய நாடகம் சிறப்பாக நடைபெற ஆடற்கலை அரசன் நடராஜப்பெருமானின் ஆசிகளை வேண்டி, திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்களுக்கும் அவரது மாணவ மாணவிகளுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

**'கலாசூரி' ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரன்**
(இயக்குநர் நாட்டியகலாமந்திர் நடனப்பள்ளி)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனையும் வாழ்த்தும்



அன்பே சிவம். அனைத்து ஜீவராசிகளிலும் கனியின் சுவைபோல் கலந்திருக்கும் படைப்பின் மூலப் பொருளை, இப்பிரபஞ்சத்தின் இருப்பிற்கும் இயக்கத்திற்கும் வித்தாய் அமைந்திருக்கும் ஆணிவேரினை அறிந்து உணர்ந்து தெளிந்து அனுபவத்தில் கொள்ள வழிகோலுவது ஆத்மஞானம். பெறற்கரிய ஆத்மஞானத்தைப் பெற்றுக்கொள்ளும் நீண்ட முயற்சிப் படிகளின் முதற் தளமாக விளங்குவது ஆலயங்கள். அவைகள் மனிதர்களைச் செதுக்கி பக்குவப்படுத்தி ஆத்மஞானத்தை துய்த்துணர ஆயத்தப்படுத்துகின்றன. அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த ஆலயங்களுக்கு இருப்பிடம் அமைவது இன்றியமையாதது. மாதுமையம்பாள் சமேதராய் கோணேசப் பெருமான் வீற்றிருந்து சகல ஜீவராசிகளையும் அருள் பாலிக்கும் திருக்கோணேஸ்வரத் திருத்தலம் அமைந்துள்ள புனித பூமியாக திருகோணமலை மண், எமது வாழ்வில் தொன்மையில் நிலைக்களனாக விளங்குகிறது.

திருக்கோணேஸ்வரத்தின் தொன்மைக்கும் கீர்த்திக்கும் சான்றாக எண்ணற்ற பக்தி இலக்கியங்கள் தோன்றின. காலத்தால் பழமை வாய்ந்த வரலாற்றுப் பெருமைகள் கொண்ட அவ்விலக்கியங்களை கால ஓட்டத்தில் அழிந்தொழிந்து போகாமல் காப்பாற்றும் முயற்சியாக சமீபத்தில் திருக்கோணேஸ்வரம் என்னும் நூல் வெளியிடப்பட்டது. ஆலயத்தின் உன்னதம் என்றென்றும் குறையாமல் இருக்க இந்நூல் உறுதுணையாக இருக்கும்.

இன்றைய காலகட்டத்தில் ஆலயத்தின் இருப்பினை தக்க வைத்துக் கொள்வது மிகவும் முக்கியமானது. அதற்கு எமது மக்களின் பங்களிப்பு அவசியமாகிறது. இராஜரெட்ணம் நடனாலய நாட்டிய கலைமணி திருமதி.**ரேணுகாதேவி செல்வபுத்திரன்** அவர்கள் திருக்கோணேஸ்வர ஆலயத்தின் வரலாற்றை மையமாகக் கொண்டு மேடையேற்றும் **"தென்கயிலை வாசா"** என்னும் இந்நாட்டிய நாடகம், காலத்தின் கட்டாயமாக உருப்பெற்ற ஒரு முக்கிய முயற்சியாகக் கொள்ள வேண்டியுள்ளது.

திருமதி. ரேணுகாதேவி அவர்கள் ஒவ்வொரு மகாசிவராத்திரி விழாவின் போதும் தான் பயிற்றுவிக்கும் குழந்தைகளின் பக்தி சார்ந்த பல்வேறு நாட்டியங்களை திருக்கோணேஸ்வரத்தில் அரங்கேற்றுவதை வழமையாகக் கொண்டவர். இக்கைங்கரியத்தினை தன் வாழ்வின் முக்கிய இலட்சியமாகக் கருதுகிறவர். அவரது நிகழ்ச்சிகளின் நேர்த்தியும் துல்லியமும் அழகியல் இயல்பும் கோணேசப் பெருமானின் புகழ் பாடும் கீர்த்தி பெற்றதாக விளங்கி, அவர் எடுத்துக் கொண்ட பிரயாசையின் தன்மையை பிரதிபலிப்பதாக அமைந்தன.

**"தென்கயிலை வாசா"** என்னும் இந்நாட்டிய நாடகம் எம்பெருமானின் கீர்த்தி சொல்லும் உன்னத காவியமாக உருவெடுக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. அவருக்கும், இந்நாட்டிய நாடக உருவாக்கத்தில் அவரோடு பணியாற்றிய குழந்தைகள் மற்றும் உதவியாளர்கள் அனைவருக்கும், கோணேசப் பெருமானது அருட் கடாட்சம் என்றென்றும் இருக்குமென்பதில் ஐயமில்லை. கோணேஸ்வர ஆலய பரிபாலன சபையின் சார்பாக எம் நிறைவான வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கிறேன்.

**கணபதிப்பிள்ளை அருள்சுப்பிரமணியம்.**
செயலாளர்
திருகோணமலை கோணேஸ்வர ஆலய பரிபாலன சபை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

கலைகள்தான் வரலாற்றை உயிர்ப்பிக்கின்றன ஓவியம், சிற்பம், நாட்டியம், இலக்கியம் என அனைத்துக் கலைகளிலும் நம் முன்னோர்கள் காலங்களைக் கடந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

" ஒன்று கூடல் ஒரு ஆரம்பம்
ஒன்று கூடி வாழ்வது செயல்பாடு
ஒன்று கூடி செயல்படுவது வெற்றி "

என்றார் மேலைத்தேய அறிஞர். உண்மைதான் ஒவ்வொரு கலைக்கும் ஒரு சிறப்பியல் இருக்கும். அந்தச் சிறப்பு முழுவதும் அந்த குருநாதரையே சார்ந்தது. அப்படிப் பார்த்தால் இது இராஜரெட்ணம் நடனாலய அதிபர் **ரேணுகாதேவி செல்வபுத்திரனின்** கலை.

முத்தமிழாம் பெருங்கடலுள் மூழ்கி அதன் அடிவரையில் வித்தகத்தால் உள்நுழைந்த வீறுடனே நாட்டியத்தில் தத்துவங்கள் முழுதும் உணர்ந்து தரணியிலே தென்கயிலை வாசனின் ஆலய வரலாற்றை நாட்டிய நாடகத்தால் புதுமையுறச் செய்த மகள்.

தன் நடனாலயத்தின் இருபத்து மூன்று வருட நினைவையொட்டி **தென்கயிலை வாசா** எனும் பொருளில் நாட்டிய நாடகத்தை அரங்கேற்றியுள்ளார். அந்த ஏதோ ஒன்றின் திருவருளால் இந்நிகழ்வு சிறப்பாக நடைபெற இதய பூர்வமாக வாழ்த்துகிறேன்.


**இராஜரெட்ணம் மகேந்திரராஜா,**
உபதலைவர், இராஜரெட்ணம் நடனாலயம்
திருகோணமலை








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



**தா**யினும் நல்ல தலைவரென்றடியார்...." என திருஞானசம்பந்தரால் சிறப்பிக்கப்படும் திருத்தலம் அமைந்துள்ள நகரம் திருக்கோணமலையாகும். இந்நகரிலே வாழ்ந்த திரு திருமதி.**இராஜரெட்ணம் தம்பதியினரின்** புதல்வி திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்கள் 1991ம் ஆண்டு தந்தையின் நினைவாக **இராஜரெட்ணம் நடனாலயத்தைத்** தோற்றுவித்து இன்று **23 ஆண்டுகள்** நிறைவில் குரு சீட மரபில் பல மாணவர்களை எமது பிரதேசத்தில் உருவாக்கி நடனக் கலைக்கு உயிரூட்டி வருவதையிட்டுப் பெருமையடைகின்றேன்.

இந்து சமய மரபிலே இந்தக் கலை மனிதனை நெறிப்படுத்தி ஆன்மீக வாழ்க்கைக்கு உதவுகின்றது. இந் நடனக்கலையின் கர்த்தாவாக நடராஜப் பெருமான் போற்றப்படுகின்றார். இத்திருவுருவத் தத்துவத்தை இந்து சமயத்தைச் சார்ந்த ஒவ்வொருவரும் அறிந்து கொள்வது அவசியமாகும். இந் நடனக் கலையானது மூன்று பிரிவினரது பங்காற்றலுடன் மேன்மை அடைகின்றது. அதாவது நடனத்தை ஆடவைப்பவர், நடனத்தை ஆடுபவர், நடனத்தைப் பார்ப்பரோடு தொடர்புடையது. இக்கலை புலன்களை கருப்பொருளுடன் கவனம் செலுத்தி செயற்படும் தன்மை கொண்டதால் ஏனைய கலைகளை விட சிறப்பிற்குரியது.

ஆயகலைகள் அறுபத்துநான்கு எனப் போற்றப் படுகின்றது. இக்கலைகளிலே நடனக் கலையானது தெய்வீகத் தன்மையும், அழகுணர்ச்சியும் கொண்டது. இது மக்களது வாழ்வியல், சமூகவியல் அம்சங்களையும் வெளிப்படுத்துவதுடன் ஏனைய கலையம்சங்களையும் தன்னுடன் இணைத்துச் செல்லும் கலையாகும். அந்த வகையில் தமிழர்களது பாரம்பரியக் கலை நிகழ்வுடன் சாஸ்திரிய நடனக் கலையானது பரத முனிவரது நாட்டிய சாஸ்திர நூலை பாவ, ராக, தாளம் என்னும் மூன்று அடிப்படை அம்சங்களை தன்னகத்தே கொண்டு வளர்க்கப்பட்டு வருகின்றது. இந்த வகையில் திருமதி.**ரேணுகாதேவி செல்வபுத்திரன்** அவர்கள் தமது நடன ஆசான்கள் மூலமாகக் கற்ற நடனக்கலையை தனது ஆசிரிய தொழில் மூலமாக நாவலப்பிட்டி கதிரேசன் வித்தியாலயம், திருகோணமலை புனித மரியாள் கல்லூரி மாணவர்களுக்கு வழங்கியதுடன், ஏனைய மாணவர்களுக்கும் இதனை முறைப்படி கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கில் 1991-ல் ஆரம்பிக்கப்பட்டதே இவ் நடனாலயம் ஆகும். இம் மாணவர்கள் தமது நிகழ்ச்சிகளை திருக்கோணமலையில் பாடசாலை நிகழ்வுகள் மற்றும் ஆலயங்களில் சமய கலாச்சார, தமிழ்மொழி நிகழ்வுகளிலும் நிகழ்த்தியுள்ளமையைப் பார்த்து இரசித்துள்ளேன் இவரிடம் கற்ற பல மாணவர்கள் எமது பிரதேசங்களிலும் புலம்பெயர் நாடுகளிலும் இலங்கையின் செழுமையை வளர்த்து வளர்கின்றனர்.

ஆடற்கலையின் கருப்பொருளை அகக்கண்களில் உள்வாங்கி காட்சி, கருத்து, இசை ஆகிய உணர்வுடன் வெளிப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் பிரதேச மண்வாசனையுடன் அமைந்த திருக்கோணேஸ்வர பெருமானது வரலாற்று பெருமைகளை **"தென்கயிலை வாசா"** என்னும் நாட்டிய நாடகத்தின் மூலமாக மக்களுக்கு வழங்க வேண்டுமென்று இவ் ஆசிரியர் எடுத்துக் கொண்ட முயற்சியைப் பாராட்டுகின்றேன். அத்துடன் இந்நிகழ்ச்சியில் பங்கெடுத்து திறமைகளை வெளிப்படுத்தும் மாணவர்களுக்கும் இராஜரெட்ணம் நடனாலய நிர்வாகிகளுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.



திரு.**செ.பத்மசீலன்**
அதிபர்
தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி
(தேசிய பாடசாலை)
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

திருக்கோணமலை நகரில் தனக்கென ஒரு பாரம்பரியத்தை ஏற்படுத்திக் கொண்டு பல கோடி மக்களை வரவேற்கும் திருக்கோணேஸ்வரம் இலங்கையில் தனித்துவமான புனித இடமாகி நீண்ட வரலாற்றைப் படைத்துள்ளது. இக்கோயிலின் வரலாற்று மகத்துவத்தை வெளியிடுவதன் முகமாக நாட்டிய கலைமணி திருமதி. **ரேணுகாதேவி செல்வபுத்திரன்** எடுத்திருக்கும் முயற்சி பாராட்டுக்குரியதாகும்.

கடந்த முப்பது ஆண்டுகளாக பாடசாலைகளில் நடனத்தை மாணவருக்கு கற்பித்தது மட்டுமன்றி, ஓய்வுபெற்ற பின்பும் மேலதிக பிரத்தியேக நடன வகுப்புக்கள் மூலம் தன் புத்தாக்கங்கள், புதுப்படைப்புக்கள், கண்டுபிடிப்புக்கள் மூலம் நடனக்கலையை வளர்த்து வருவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். இத்தகைய படைப்புகளை வெளிக்கொணருவதற்கு **"இராஜரெட்ணம் நடனாலயம்"** சிறந்ததொரு களமாக அமைந்துள்ளது. சிந்திக்கவும் சீர் செய்யவும், நடனக்கலையை சிறப்பிக்கவும், வாழ்வை வளப்படுத்தவும் சிறந்த ஊடகமாகவும் விளங்குகின்றதென்பதில் ஐயமில்லை. புனித தலமாக விளங்கும் கோணேஸ்வரர் கோயிலை மையமாக வைத்து அதன் வரலாற்றை வெளிக்கொணரும் இந்நாட்டிய நாடகம் காலத்தின் நிகழ்வுகளைப் பதிவு செய்து கருத்துப் பரிமாற்றங்களை வெளிக்கொணரும் நிகழ்வாக நிறைவு பெறுமென நம்புகின்றேன்.

இந்நிகழ்வினை உருவாக்கி, நெறிப்படுத்தி, மாணவர்களை பயிற்றுவித்த கலைமணி திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரனை நான் பாராட்டி வாழ்த்துகின்றேன். இந்த முயற்சியில் ஈடுபடும் திரு. செல்வபுத்திரன், ஊக்குவிப்பாளர்கள், உறவினர்கள், ஏனைய இசையாசிரியர்கள், பங்குபற்றும் மாணவர்கள், உதவியாளர்கள், உறவினர்கள், அனைவரும் பாராட்டுக்குரியவர்களாவர். தொடர்ந்து இத்தகைய நாட்டிய நாடகங்கள் வெளிக் கொண்டு வருவதுடன் இதன் மூலம் சிறந்த ஆளுமையுள்ள மாணவர்களும், சமுதாயமும் உருவாக்கப்பட வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

இந் நிகழ்வு இனிதே நிறைவு பெற்று அனைவரும் மகிழ்வுடனும், ஒற்றுமையுடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

அருட்செல்வி **தெரேஸ்ராணி, அ. கா.**
முன்னாள் அதிபர், சென். மேரிஸ் கல்லூரி
அப்போஸ்தலிக்ககார்மேல் கன்னியர்மடம்
மாகாணத் தலைமையகம், கொழும்பு.



UNIVERSITY OF JAFFNA LIBRARY



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



இசையும் நடனமும் இறைவனோடு இயைந்த எழிற்கலைகள். இதில் உலகம் வியக்கும் நம் பரதக்கலை மிக உன்னதமானது. இக்கலையைப் பயில்வோர், பயிற்றுவிப்போர், பேணி வளர்ப்போர், அனைவரும் இறையருளிற்குப் பாத்திரமானவர்கள்.

ஆடல் அரசனான நடராஜமூர்த்தி நடனக்கலையின் தெய்வமாக விளங்குபவர் பிரபஞ்சத்தின் ஐந்தொழில்களையும் தனது ஆடல் மூலம் நிகழ்த்திக்கொண்டு இவ்வுலகின் உள்ளேயும், மனிதர்களுடைய உள்ளமாகிய சிற்றம்பலத்தினுள்ளும் தனது இறை இயக்கத்தை நடத்திவரும் சச்சிதானந்த பரம்பொருளாக விளங்குபவர்.

ஆடல் வல்லானுக்கு நடனக்கலையை அர்ப்பணித்தால் உலகிலே தானிய விருத்தியும் எல்லாவித நன்மைகளும் சந்தோசங்களும் ஏற்படுகின்றது என வேதாகமங்கள் **"நடனம் தான்ய சித்தி ஸ்யாத்" "சுத்த நிருத்தம் சுபப்ரதம்" "நிருத்த ஹ்னேது துக்கம்"** இவ்விதம் கூறுகின்றன.

திருகோணமலையின் இராஜரெட்ணம் நடனாலயம், நடன மாணவர்களை உருவாக்குவதில் தம்மை அர்ப்பணித்து வருகின்றது. இந்த முயற்சியின் பயனாக **"தென்கயிலை வாசா"** என்ற நாட்டிய நாடகம் இடம்பெறுவது சிறப்பு மிக்கதாகும். இதனை வழிப்படுத்தி வரும் நாட்டியக் கலைமணி திருமதி. **ரேணுகாதேவி செல்வபுத்திரன்** அவர்கள் இலங்கையின் முன்னணி நடன ஆசிரியைகளில் ஒருவர். தனது தந்தையின் ஞாபகர்த்தமாக உருவாக்கியிருக்கும் **இராஜரெட்ணம் நடனாலயத்தின்** மூலம் நூற்றுக்கணக்கான மாணவிகளை உருவாக்கி இருக்கின்றார். இவரால் உருவாக்கப்பட்ட மாணவிகள் இன்று உலகின் பல பாகங்களிலும் நாட்டியத் துறையில் பிரபல்யம் பெற்று விளங்குகின்றனர். திருகோணமலைப் புனித மரியாள் கல்லூரியில் இவர் நடன ஆசிரியையாக பணியாற்றிய காலத்தில் தமிழ் மொழித்தினப் போட்டிகளிலும் ஏனைய நடனப் போட்டிகளிலும் மாணவிகள் பங்கு பற்றி வெற்றிபெறச் செய்துள்ளார்.

அத்துடன் பலமாணவிகளுக்கு நடன குருவாக இருந்து பலரும் மெச்சத்தக்க வகையில் அரங்கேற்றத்தையும் நடாத்தி இருக்கின்றார். கலாசார திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட நடனப் போட்டியில் தனது நடனாலய மாணவிகள் பங்குபற்றி அகில இலங்கை மட்டத்தில் வெற்றிபெறச் செய்துள்ளார். நடனம் அவரது மூச்சு என்றால் மிகையாகாது.

திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்களின் நடனப்பணி மேலும் தொடர வேண்டும். அவருக்கும் அவரது நடனாலய மாணவிகளுக்கும் எல்லா நலன்களும் கிடைக்க வேண்டும் என்று கோணேசப் பெருமானை பிரார்த்தித்து வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**"கலை இன்பமே நிலை இன்பம்"**

திருமதி. **சுலோசனா ஜெயபாலன்**
அதிபர்
தி/ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி,
திருகோணமலை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

இராஜரெட்ணம் நடனாலயத்தினரின் **'தென்கயிலை வாசா'** நாட்டிய நாடகத்திற்கு வாழ்த்துச்செய்தி அளிப்பதில் மிகவும் பெருமைப் படுகின்றேன். திருக்கோணமலை நகரில் நீண்ட காலமாகப் பரதத்தின் சிறப்புகளைப் பரப்பி நிற்கும் நடனாலயமும் அதனூடாகப் பயிற்சி பெற்ற மாணவர்களும் இந்த மண்ணுக்குத் தொடர்ந்தும் பெருமை தேடித் தரவேண்டும் என விழைகிறேன்.

பாவ, ராக, தாள முதலெழுத்துக்களின் இணைவே பரதம் என்பர் அறிஞர். எனவே பரதம் பாவம், ராகம், தாளம் என மூன்று வகைப்படுகிறது. பாவம் கரவகையால் நாற்பத்தொன்றாகவும், சிரவகையால் பத்தாகவும், பதவகையால் பத்தாகவும், நேத்திர வகையால் ஏழாகவும், ரசவகையால் ஒன்பதாகவும், சுரவகையில் ஆறாகவும் விரிகின்றது. கரவகையால் உருவாகும் பாவம் ஒற்றைக் கரவகை, இரட்டைக் கரவகை என முறையே இருபத்துமூன்றும், பதினெட்டும் என்பர் பரத வல்லுனர்கள்.

இராகம் என்பது நாதத்திலிருந்து தோற்றம் பெறுகின்றது. நாதம் பிரணவம் ஆகி ஓங்காரத்வனியிலிருந்து சுரத்வனி தொடக்கம் குமந்தத்வனி வரையிலான பத்துவிதத் தொனிகள் தோன்றுகின்றன. இத்தொனிகளின் காரணமாக ஆன்மா, மனது, அக்கினி, வாயு என்பவற்றின் முயற்சியால் ஏழு ஸ்வரங்களும் மந்த இசை, தாரைஇசை, மத்திம இசை என மூவகை இசைகளும் தோன்றுகின்றன.

ஸ்வரங்கள் ஆரோகணம் முதலாக பத்துவிதக் கமகங்களோடு கூடி மேகவிரஞ்சி தொடக்கம் தன்னியாசி வரையிலான முப்பத்திரண்டு தலைமை இராகங்களாகி அவை மேலும் பெருகுந் தன்மை கொண்டமைகின்றன.

தாளமானது சதாசிவமூர்த்தியின் ஈசானத்திருமுகத்திலிருந்து உற்கடிதம், தற்புருட முகத்திலிருந்து சம்பத்துவேட்டம், அகோரமுகத்திலிருந்து சட்பிதாபுத்திரிகம், வாம முகத்திலிருந்து கச்சற்புடம், சத்தியோசாத முகத்திலிருந்து சாசற்புடம் எனத் தோன்றியமைகின்றது. இவற்றின் உபதாளங்களாக ஆதிதாளம், பார்வதிலோசனம், குடுக்கம், சிங்கணந்தம், திரிமாத்திரை என்பன தோன்றுகின்றன. இவ்வாறாகத் தாளம் நூற்றியெட்டு வகையென்பர் பெரியோர்.

இத்தகைய அரிய தெய்வாம்சத் தத்துவங்களைச் சாதாரண மனிதர்களுக்கும் காட்சிப்படுத்தும் கலையே பரதமாகும். இதனை வேறு விதமாகச் சொல்லப்புகின் இயற்கை அசைவுகளின் உன்னதங்களை ஒருமுகப்படுத்திப் பெறும் ஆற்றலின் உருவமே பரதக்கலை எனலாம். இதனாற்றான் சைவர்களின் முழுமுதற் தெய்வமான சிவன் ஆடலரசு எனவும் பெயர் பெறுகிறார்.

எனவே, தெய்வாம்சம் பொருந்திய பரதக்கலையைத் தாங்கி நிற்பவர்களும் தெய்வாம்சம் கொண்டவர்களே. அத்தகையோரால் ஆக்கியளிக்கப்படும் நாட்டிய நாடகமான **தென்கயிலை வாசா** நாட்டிய வரலாற்றில் சாதனை புரியுமென்பதில் எவ்வித ஐயமுமில்லை. தென்கயிலை வாசா நாட்டிய நாடகத்தைப் பயிற்றி அரங்கேற்றும் நாட்டியக்கலைமணி திருமதி. **ரேணுகாதேவி செல்வபுத்திரன்** அவர்களும் அவராற் பயிற்றுவிக்கப்பட்ட பரத மாணவிகளும் இம்மண்ணின் சிறப்புச் சொத்து. அவர்கள் என்றென்றும் புகழ்பெறவும் தொடர்ந்தும் சாதனைகள் படைக்கவும், தென்கயிலையமர் கோணேசர் பதம்பணிந்து மனதார வாழ்த்துகிறேன்.

அதிபர்
**திரு.சி.ஆனந்தசிவம்.**
தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி,
திருகோணமலை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டியக் கலைமணி திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன்
அவர்கட்கு அன்புடன் உளமார உவந்தளிக்கும்



# வாழ்த்துப்பா

இருபத்துமூன்று ஆண்டுகள் இம்மண்ணில் நடனமணியாக
இருந்து பரதம் பயிற்றும் பாவையே!
பெருவிருப்பாய் பெற்றவன் பெயரென்றும் விளங்க
பெருமையுடன் நடனாலயம் சிறப்புற நடத்துகிறாய்
அருங்கலையை ஆர்வமுடன் அரிவையர்க்குப் புகட்டி
அழகுறவே மேடையேற்றி ஆசிகள் பெற்று
உருவாக்கினாய் உனக்கென ஓர் தனி வழியை
உலகம் போற்ற நீடு வாழ்க! வாழ்கவே!!

சந்தமும் ஆடவல்லான் அடியிணைகள் போற்றி
சாலவே பல நிகழ்வுகள் அரங்கேற்றினாய் ஆர்வமுடன்
அந்த நாட் தோன்றிய தென்கயிலை வாசன்
ஆதி வரலாறு முதல் இன்றுவரை சிறப்பாக (த்)
தந்தனை உன்னத நாட்டிய நாடகமாயின்று
தாரணி போற்றிட தண்மணம் கொண்ட
சந்தமிகு உன்புகழ் என்றும் ஓங்கவே
சாற்றினேன் நல்வாழ்த்துக்கள் நீடு வாழ்க! வாழ்கவே!!

கண்டோம் கதையழகை கேட்டோம் இசையமுதை
காசினி போற்றிடும் கோணையப்பன் வரலாறு
மண்டலத்தில் நாட்டியமாய் அரங்கேறிய சிறப்பு
மாண்புறு மன்றாடும் ஈசனுக்கு உவப்பு
பண்ணோடு பாடலும் பாவையர் எழிற்கோலமும்
பாதங்களில் ஜதிகளும் பக்குவமாய் அமைந்திருக்க
எண்ணமெல்லாம் இனிக்கிறதே! இப்படி ஒரு நிகழ்வா!
ஏற்றம் பெற்று நீ நீடு வாழ்க! வாழ்கவே!!

நல்லாசிகளுடன்
**திருமதி. தேவிகாரணி முருகுப்பிள்ளை**
சங்கீத கலாவித்தகர்
ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்.
திருகோணமலை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆன்மீகக் கலை நாட்டியம்

சிவபெருமானின் பூர்வீக தலமாகிய கைலாச மலையின் தென்பகுதியில் சற்றுப் பிசகாத நேர்க் கோட்டில் திருக்கோணேஸ்வரம் இயற்கையாகவே அமைந்துள்ளதால் தெட்சண கைலாசம் (தென்கயிலாயம்) என்ற பெயர் கொண்டு விளங்குகின்றது திருகோணமலை.

தமிழர்களின் வெளிப்பாடு சைவமும், தமிழுமே, மொழியும் சமயமும் இணைந்த உள்ளுணர்வில் இசையும், நாட்டியக் கலையும் தமிழர்களின் கலாச்சார விழுமியங்களைப் பாதுகாக்கும் விளக்காக நின்று பிரகாசிக்கின்றது.

மனிதர்களின் மொழிகள் என்பன வெவ்வேறு வடிவமான வடிவமைப்பில் உலக நடைமுறையில் காணமுடியும். தமிழ் மொழி மட்டுமே பக்திக்குரிய மொழியாக உயிர் பெற்றுள்ளது. அதன்படி வாழ்கின்றது.

தமிழர்களின் நாட்டியக் கலையின் அம்சங்கள் தெய்வங்களின் வடிவினில் ஆன்மீக மயப்படுத்தப் பட்டுள்ளது. ஒழுக்கமும், பக்தியும், அடக்கமும், அர்த்தமும் அதனுள் நிறைந்துள்ளது.

இராவணன் என்ற இலங்கை மன்னன் மூவுலகையும் ஆண்ட பெருமகன் என்று வால்மீகி குறிப்பிட்டுள்ளார். அம்மன்னனின் திருவடிகள் திருகோணமலையிலும் பதிந்துள்ளது. அதற்குரிய பல வரலாற்றுச் சான்றுகளும் உண்டு.

நடனத்தில் தாண்டவம், லாசியம் என இனங்காணப்படும் சொற்களின் தன்மை சிறப்பிற்குரியது. ஆண்மையின் கம்பீரத்தைச் சித்தரிப்பது தாண்டவம் என்றும் பெண்மையின் மென்மையைச் சொல்வது லாசியம் என்றும் முன்னிலைப் படுத்தினர்.

படைத்தல், காத்தல், அழித்தல் மட்டுமல்ல சிவனது தொழில் நடனக் கலையினையும் வடிவமைத்துப் படைத்தார் என்பதே உண்மை. அக்கலையின் எழில் அவன் அருளின் உயிர் இக்கலையினை வளர்ப்பவர்கள் அவன் அருளால் உலகம் கண்ட பெருமைக்குரியவர்கள் என்றால் மிகையாகாது.

நடன அரங்கேற்றம் காணும் முதலாவது பூசை நடேசப் பெருமானுக்கு என்பதே நாம் காணும் வழிவந்த வழிபாடாகும். நடராஜப் பெருமான் தனது நடனத்தை பதஞ்சலிக்கும் வியாக்கிரபாதருக்கும் ஆடிக் காட்டியதாகவும் அந்நாளே திருவாதிரை நட்சத்திரம் கூடிவரும் புனித நாளாகும். அந்நடனமே அணுக்கள் தொடக்கம் அண்டம் வரை படர்ந்து ஒன்றிணைந்த நடனமாக வெளிப்பட்டது.

வணங்கும் முறையில் கூட தமிழர்களுக்கு விதிமுறைகள் உண்டு. அதனை வகைப்படுத்தி பின்வரும் வணங்கும் முறையை வகுத்தனர். கடவுளை வழிபடுவதாயின் தலைமீது கை வைத்து வணங்குதல் வேண்டும். குருவை வணங்குவதாயின் நெற்றியின் புருவத்தில் கை வைத்து வணங்குதல் வேண்டும். மார்பருகே கை வைத்து பிராமணர்களுக்கும், சபையில் கூடியிருப்போருக்கும் வணக்கம் செய்தல் வேண்டும் என்று கூறிவைத்தனர்.

பரத நடனம் என்ற ஆன்மீகக் கலையை சற்று உற்று நோக்கினால் " அபிநயம் " என்ற ஒலியில்லாத ஒளியினால் உரம் ஊட்டிய தத்துவ விளக்கத்தை சாதாரண பாமரமக்களும் அதன் அர்த்தங்களையும், அழகையும் காணக் கூடியவாறு அமைந்து ஓசையில்லாத உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் மொழியே "அபிநயம் "என்றாகியது.

தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என்றபடி வாழ்ந்துகாட்டும் திருமதி.ரேணுகாதேவி செல்வ புத்திரன், **இராஜரெட்ணம் நடனலாயம்** என்ற பெயர் கொண்டு தனது தந்தையின் கனவினை நனவாக்கிய நாட்டிய வித்தகி என்ற பெருமை பெற்றவர்.

கலை அம்சங்களில் தூசு படியாத நெறி முறையினில் தனது கலையை உயிர் ஊட்டி வளர்த்து நடேசப் பெருமானின் அருள்பெற்று வாழ்கின்ற அவரை ஆசிரியர், குரு என்று கூறுவது பொருத்தமுடையது. அவரால் திருகோணமலைக்கும் பெருமை சேர்கின்றது.

**இ.சோமசுந்தரம்,**
(அகில இலங்கைக்கான சமாதான நீதவான்),
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



பஞ்ச ஈஸ்வரங்களில் தலையாயது, பாடல் பெற்ற திருக்கோணேஸ்வரத் திருத்தலமாகும். மாதுமை அம்பாளோடு வீற்றிருந்து அருள் புரியும் கோணநாதப் பெருமானை பாரதத்தில் இருந்தவாறே சம்பந்தப் பெருமான் பாடிப் பரவசமுற்றதாக வரலாறு. ஆதியில் ஆதிசேஷன் அகங்காரம் கொண்டு தானே பலவான் என மாமேரு பர்வதத்தை மூடியிருக்க அவன் தன் கர்வத்தை அடக்கு முகமாக வாயு பகவான் வீசி அடித்ததினால் மேரு பர்வதத்தின் மூன்று குன்றுகள் பெயர்ந்து வீசப்பட்டதாக புராண வரலாறு கூறுகின்றது. இவற்றுள் தெற்கு நோக்கி வீசப்பட்ட குன்றில் திருக்கோணேஸ்வரப் பெருமான் அமர்ந்து அருள் செய்வதனால் அது தெட்ஷணகயிலாயம் என்னும் பெயர் பெற்று விளங்குகின்றது.

இத்தலத்தை விளித்துப் பாடிய சம்பந்தப் பெருமான் "கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த" எனப் போற்றியதனால் இத்தலத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் பல ஆலயங்கள் மலிந்திருந்தமை தெரிகின்றது. இதன் காரணமாகவே கால் வைக்கும் இடமெல்லாம் சிவலிங்கம் என்னும் ஐதீகத்தால் செருப்பை ஒதுக்கும் சிவனடியார்கள் இன்றும் பலருண்டு.

இலங்காபுரியை ஆண்ட இராவணன் தன் தாயாரின் தள்ளாமை காரணமாக எம்பெருமானை சென்று சேவிக்க இயலாத தன்மை கண்டு எம்பெருமானை தாயார் அருகே கொண்டு செல்ல சிவனருளால் கிடைக்கப்பெற்ற திவ்ய வாளினால் எம் பெருமான் அமர்ந்து அருள் செய்யும் மலையை வெட்டிய போது கிலேசமடைந்த தேவர்கள் வேண்டுகோளிற்காக மகாவிஷ்ணு ஒரு அந்தண வடிவத்தில் சென்று இராவணன் தாயார் காலமானார் என்னும் செய்தியை சொன்னார் எனவும், அச்செய்தி கேட்ட இராவணன் மலையை வெட்டுவதை நிறுத்தி கன்னியா சென்று தன் தாயாருக்கு ஈமக்கிரியைகள் செய்தான் என்று புராண வரலாறு கூறுகின்றது. இராவணன் வாளால் வெட்டப்பட்ட பிளவு இன்றும் இராவணன் வெட்டு என்று சொல்லப்படுவதைக் காணலாம்.

திருக்கோணேஸ்வரப் பெருமானுக்குப் பிரமாண்டமான கோவில் கட்டிய பெருமை குளக்கோட்ட மன்னனுக்கு உரியது. ஆனாலும் காலத்தின் கோலத்தால் இலங்கை மீது படையெடுத்த போர்த்துக்கேயத் தளபதி எம் பெருமான் கோவிலை இடித்து சூறையாடினான் என சரித்திரம் சொல்கிறது. திருக்கோணேஸ்வரத்தைச் சுற்றியுள்ள கற்கோட்டையானது கோவில் இடிபாடுகளை வைத்து கட்டப்பட்டதாக வரலாறு கூறுகின்ற போது கோவிலின் பிரமாண்டத்தை எண்ணிப் பார்க்க முடிகின்றது. கொடிய போர்த்துக்கேயரிடமிருந்து காப்பாற்றப்பட்ட எம்பெருமானின் விக்கிரகங்கள் ஐம்பதுகளில் கண்டெடுக்கப்பட்ட போது மீளவும் எம் பெருமான் அமர்ந்து அருள் செய்யும் வண்ணம் இன்றிருக்கும் கோவிலைக் கட்டிய அன்பர்கள் என்றென்றும் நினைவில் நிறைந்திருப்பார்கள். இப்போது நடைபெறும் பாபநாச சுனைத்தீர்த்த உற்சவமும் சிவன்ராத்திரியின் போது எம்பெருமான் முழுமையாக சோடிக்கப்பட்டு நகர்வலம் வருவதும் தெப்பத்தில் ஏறி கடல் வலம் வருவதும் வேறெங்கும் காண முடியாக் கண் கொள்ளாக் காட்சி என்றால் மிகையாகாது.

இத்தகைய சிறப்பு பெற்ற திருக்கோணேஸ்வரப் பெருமானின் சரிதையை நடன அமைப்புக்கள் மூலம் வெளிப்படுத்தும் முயற்சியில் இறங்கிய நாட்டிய வித்தகி திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் பாராட்டப்பட வேண்டியவர். " கண்டபடியே கண்டு கொண்ட படியே கொண்டு வாழும் வாழ்வு வாழ்வல்ல " எனக்கண்டு எமது விழுமியங்களை எதிர்கால சந்ததிகட்கு இட்டுச் செல்லும் பணியில் ஈடுபட்டுள்ள இந்த நர்த்தகியின் சேவை போற்றப்பட வேண்டியதே. அவர் தம் சேவை மென்மேலும் விருத்தியடைய எல்லாம் வல்ல கோணேஸ்வரப் பெருமான் தாம் பணிந்து வேண்டுகின்றேன்.

சங்கீத வித்துவான். **திருமதி.விஜயகுமாரி தவசிலிங்கம்**
இயக்குனர், இசை நடன கலாலயம்.

UNIVERSITY OF JAFFNA
204206
ARCHIVES



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான் கண்ட கலைக்கோயில்

நவீன உலகில் நடனக் கலை எல்லா மக்களாலும் பாராட்டப்படுகிறது நடனம் மனதின் உள்ளுணர்வுகளை பாவனை மூலம் இசையுடன் எடுத்துக் காட்டுகிறது. கம்பன் இந்த அருங்கலையைப் பற்றிக் கூறும் போது

"கைவழி நயனம் செல்ல
கண்வழி மனமும் செல்ல"

என்று அழகாக வர்ணிக்கிறார். நடனக்கலையில் ஈடுபடுவோர் சில இன்றியமையாத குணங்கள் உடையவராக இருத்தல் வேண்டும். இக்குணங்களைப் பிறப்பியல்பிலும், பயிற்சியிலும் பெறலாம். பிறப்பியல்பில் பெற்றிருந்தால்தான் பயிற்சி மூலம் முறையான ஒளி பெறமுடியும். இந்த வகையில் எனது மதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய குரு திருமதி. **ரேணுகாதேவி செல்வபுத்திரன்** அவர்கள் இயற்கையான முகப் பொழிவு, உடல்வளம் இசையிலும் தாளத்திலும் அமைந்த உணர்வு, அறிவுடமை, ஆர்வம், பொறுமை, தன்னடக்கம், தன்னம்பிக்கை, பக்தி சிரத்தை, அயராத உழைப்பு, ஆற்றல், குரல்வளம் போன்ற நற்பண்புடையவராய்த் தோன்றி முறையான பயிற்சி மூலம் விடாமுயற்சியுடன் முன்னேறி இன்று நீலக்கடலலை போல் திருமலையில் பிரபல நடன ஆசிரியராகத் திகழ்கிறார் என்பதில் ஐயமில்லை.

கலையை வளர்க்கக் கலைக்கூடம் அவசியம். எனது குரு தனது அன்புத் தந்தையின் பெயர் மறக்கப்படாமல் இருக்க **"இராஜரெட்ணம் நடனாலயம்"** எனப் பெயர் சூட்டி கலைக்கூடத்தை அமைத்தார். கூடத்திற்குள் புகுமுன் எனது சிரம் தாழ்த்தி வணக்கம் செலுத்துகின்றேன். அமைதியான, அழகான நறுமணப் பூந்தோட்டம் அமைந்த இடத்தில் சிறு நிலப்பரப்பில் கலைக்கூடம் அமைந்திருந்தாலும் பண்ணும் பரதமும் நிறைந்த உறைவிடமாகத் திகழ்கிறது. கூடத்தில் காணப்படும் படங்கள், குருபக்தி, பதிபக்தி, பெற்றோர் பாசம் என்பவற்றை எடுத்துக் காட்டுகின்றன. கூடத்தில் எரியும் ஒளிவிளக்கும், தூய நறுமணமும், பூக்கள் சந்தணம் போன்றவற்றின் வாசனையும் மனதிற்கு மகிழ்வையும் அமைதியையும் தருவனவாகி இருக்கின்றன. வாத்தியங்கள், கருவிகள் நடனத்தின் மீது அவருக்குள்ள வாஞ்சையைக் காட்டுகின்றன. இவையெல்லாமே எனது குருவின் சிறந்த குணங்களை எடுத்தியம்புகின்றன. மனிதன் உயர ஏறுவதற்கு ஏணி அவசியம் தேவை என்பது போல எனது குருவின் வளர்ச்சிப் படிகள் ஒவ்வொன்றிற்கும் **"Uncle" திருவாளர் செல்வபுத்திரன்** படிக்கற்களாக இருந்து வருகிறார். அவர் இன்றி எனது குருவின் வளர்ச்சி முழமை அடையாது. நடனம் பயில வரும் ஒவ்வொரு மாணவியையும் குருவுடன் சேர்ந்து அன்பு செய்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளை மனங்கோணாது செய்து வருகிறார்.

தான் பெற்ற கலையை தன்னிடம் கற்கும் மாணவரும் திறம்பட பயில வேண்டுமென பெரும் முயற்சிகள் செய்கிறார். இவரிடம் பயின்ற நான் இன்று டென்மார்க் நாட்டில் நடன ஆசிரியராக பணிபுரிகிறேன் என்றால் அதன் பெருமை எனது குருவையே சேரும். வார்த்தைகளால் சொல்ல முடியாத ஆக்கங்களை எனக்கு தந்து உதவுகிறார். அவருக்கு எனது இதயம் நிறைந்த நன்றி கூறுவதுடன் கலைக் கூடம் மென்மேலும் சிறப்பாக வளர்ந்து பல ஆண்டுகளைக் காண இறைவனின் ஆசி வேண்டி தாழ் பணிந்து வணங்கி வாழ்த்துகின்றேன்.

நடனக்கலைமாமணி
திருமதி. **கிறிஸ்டினா யோகநாயகி அன்ரன்**
நடன ஆசிரியை, டென்மார்க் .

**நிலைக்கு நான் மறை தலத்தான பூசுரர் திருக்கோணமலை**
**தலத்தாறு கோபுர நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு பதியில் வருவோனே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபக்த இராவணனும் திருக்கோணேஸ்வரமும்

ஞானத்திற் சிறந்தவர் ஞான சம்பந்தர் மூன்று வயதினிலே இறைவனாலும் இறைவியாலும் ஆட்கொள்ளப் பெற்றவர். பதினாறு ஆண்டுகள் தான் இவ்வுலகில் பூத உடலோடு வாழ்ந்தார்.

ஞானசம்பந்தப் பெருமான் பாடிய தேவாரத்திருப்பதிகங்கள் ஒவ்வொன்றிலும் எட்டாவது பாடல் இராவணனை பற்றியதாகும். ஒன்பதாவது பாடல் பிரம்ம விஷ்ணுக்களைப் பற்றியதாகும் ஆயிரம் திருப்பதிகங்களிலும் ஆயிரம் இடங்களிலும் பிரம்ம விஷ்ணுக்கள் இடம் பெற்றது போலவே இராவணனும் இடம் பெற்றிருக்கின்றான்.

இராவணன் என்ற சொல்லைக் கேட்டதும் எமது மனதில் கொடியவன் ஒருவனுடைய படமே பதிக்கின்றது. உலகத்தில் நூற்றுக்கு நூறு நல்லவனும் இல்லை, நூற்றுக்கு நூறு கொடியவனும் இல்லை நல்லவர்களென்றும் நாம் மதிக்கத்தக்கவர்களிடம் எத்தனையோ கொடூரமான குணங்களையும் பார்க்கின்றோம். கொடியவர்கள் என்று நாம் தீர்மானித்தவர்களிடம் எத்தனையோ நல்ல குணங்களை பார்க்கின்றோம். இராவணன் உண்மையிலேயே ஒரு கொடியவனானால் சம்பந்தப் பெருமான் பதிகந்தோறும் குறிப்பிட வேண்டியது அவசியமில்லையே, இரண்டொரு இடத்தில் மாத்திரம் குறிப்பிட்டு மற்றைய இடங்களைத் தவிர்த்திருக்கலாமல்லவா? இராவணன் ஒரு சிவபக்தன் என்பதனால் மாத்திரமன்று அவனிடம் பல நல்ல பண்புகளும் நிரம்பி இருந்திருக்க வேண்டும். மாற்றான் மனைவியை விரும்பினான் அதனால் காமத்தது்க்கு இடம் கொடுத்தான் என்பதைத்தவிர அவனிடம் வேறு என்ன தீயகுணங்கள் காணப்பட்டன.

நல்லது என்று சொல்லப்படும் அமிர்தத்தை முறை தவறிக் கையாண்டால் அது நஞ்சாகி விடும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சல்லவா? விஷத்தைபக்குவமாக பயன்படுத்தினால் அது மருந்தாகின்றதல்லவா? திருபாற்கடலை அமிர்தத்தை விரும்பித்தானே கடைந்தார்கள் ஆனால் அது முதலில் கொடுத்தது விஷம் தானே ஆகவே உலகில் நலம் தீது இரண்டும் கலந்தே இருக்கும்.

சாதாரணமாக மக்களுடைய உள்ளத்திலே கொடுமைக்கும் கீழ்மைக்கும் எடுத்துக்காட்டாகவே இராவணன் விளக்கம் பெறுகின்றான். கருத்தில் வைப்பதற்கும் தகுதியற்ற ஒருவனை சம்பந்தப்பெருமான் பதிகம் தோறும் நினைவூட்டிய பெருமையை நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

நடுநிலையில் நின்று ஆராயுமிடத்து இராவணனிடம் எத்தனையோ பண்பாடுகளைக் காணலாம் இராவணன், சீதை, இராமன் மூவரும் மறைந்து ஐயாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. ஆனால் அவர்கள் குறிக்கும் தத்துவப்பொருள் இன்றும் நம்மிடையே உள்ளன. இராமன் பரமாத்மதத்துவம், சீதை ஜீவாத்மதத்துவம், இராவணண் மனோதத்துவம்.

“குலத்தளவே ஆகும் குணம்” என்று அடிக்கடி நம்மவர்கள் குறிப்பிடுவது வழக்கம் அப்படிப்பார்த்தாலும் இராவணண் வருணத்தில் பிராமணன் பிரமாவுடைய கொள்ளுப்பேரன், அறிவு ஒழுக்கம் தபோவலிமை ஆகியவற்றிற்கு நிலைக்களமாய் இருப்பவர் பிரமா. பிரமாவுடைய உத்தமபுத்திரர் புலஸ்தியர் புலஸ்தியருக்கு மகனாகப் பிறந்தவர் விச்சுவாவசு என்னும் பிரம்மரிஷி இந்த பிரம்மரிஷியின் புத்திரனே இராவணன் ஆகவே இராவணனுடைய பிறப்பில் யாரும் குற்றங்காண முடியாது.

வேத சாஸ்திரங்கள் யாவும் நன்கு கற்றுணர்ந்துவன் கலை ஞானங்களுக்கு இருப்பிடமானவன் ரஜோ குணத்தோடு கூடிய மனதின் அவதார புருஷன் இராவணன் .

நன்றி
ஆத்மஜோதி

UNIVERSITY OF JAFFNA LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனங்கமழும் திரிக்கயிலைப் பெருமான்

'திரை பல மோதிக் குன்று மொண் காணல் வாசம் வந்துலவும் கோணமாமலையமர்ந்தாரே" அலைகள் மோதுகின்றன, எம்பெருமான் பாதார விந்தங்களைக் கழுவிய பெருமையுடன் திரும்புகின்றன. மோதும் ஒவ்வொரு அலையும் இப்பூமியில் பிறக்கும் ஒவ்வொரு ஜீவராசியும் கோணநாயகன் அருள் பெற்று மகிழ்ச்சியுடனும், இறுமாப்புடனும் சேர்வது போல பாறைகளுடன் மோதுண்டு உருக்குலைந்து போகின்றன. எம் பெருமானே உன் பாதமலருக்கு அலைகள் தரும் பெருமைதான் என்னே! உன்னையடையும் பக்தர்களுக்கு அருளலைகளை வாரி வழங்கு வள்ளலே உன் புண்ணிய பூமியில் வாழ்பவர்களுக்கு எண்ணிய கருமம் நிறைவேற அருள் புரிவாய்.

**"வணங் குமரன் பூசை முன்போல் நடக்கும் போது**
**மகா விலங்கைப் பதியனை மருவுஞ் சிங்கன்**
**இணங்கு நவரத்தினத் தாற் பொன்னான் முந்தா**
**லிறை வருங் கால யமங் கியற்றுங் காலம்**
**சுணக்கமில்லை மானிடர்க்குத் துக்கமில்லைச்**
**சொல்லரிய போக மெல்லாந் துய்த்து வாழ்வர்**
**மனங் கமழுந் திரிகயிலைப் பெருமான் பாதம்**
**மனத் திருத்தி மகிழ்ச்சியுடன் வாழ்வர் மக்கள்"**

– கல்வெட்டு : 48 –

UNIVERSITY OF JAFFNA
204206
LIBRARY

கோணநாயகன் திருவடியே சரணம் என அருள் வேண்டி நிற்கும் பக்தர்களே! அவனடைந்தோர் அவனை நினைத்தோர் அவன் திருப்பாதங்களை மனத் திருத்தி மகிழ்ச்சியுடன் வாழ்வது திண்ணம். அவன் பெருமை சமய குரவராலும் சமயப் பெரியோர்களாலும், அறிஞர்களாலும் எழுதி பெருமைப் படுத்தப்பட்ட ஒன்று. பட்டை தீட்ட தீட்ட பிரகாசிக்கும் வைரம் உலக மகாயுத்தத்தின் போது கூட ஆறு காலப் பூஜையையும் தவறாமல் தனக்கே உரித்தாகிக் கொண்ட எமது கோணநாயகன் பெருமை கூறும் பல திருவுருவங்கள் காலத்திற்கு காலம் அகழ்வுகளின் போது எடுக்கப்படுவது எம்பெருமானின் வரலாற்று நிருபணங்கள் ஆகும். அவன் பெருமை சொல்லாலும் செயலாலும் அழிக்க முடியாத ஒரு சக்தி என்பதற்கு கல்வெட்டே சான்று.

கோணேஸ்வரப் பெருமான் காலத்தால் அழியாதவர். காலம் அவரை அழிக்க முடியாத ஒன்று. அழிவுப் பாதைக்கு வழி செய்தவர் அழிந்து பட்டது சரித்திரம் கண்ட உண்மை.

ARCHIVES

**"மாறாத புனல் பாயும் திருக்குளமும்**
**வயல் வெளியும் வருந்திச் செய்தே**
**வீரக வெண்மரபோர்க் கியாமற்**
**கோணமலை விமலற் கீந்தேன்**
**பேரான பெரியோரே யிதற் கழிவு**
**நினைப்பவர்கள் வெப்பு நீங்கி**
**நீராகப் போவரிது நிச்சய நிச்**
**சயங் கோணை நிமலராணை"**

– கல்வெட்டு : 52 –

எம்பெருமானே உன் பாதாரவிந்தங்களைக் கடலலைகள் தழுவி ஆர்ப்பரிப்பது போன்று பக்தர்களின் பக்தி அலைகள் மோதிக் கொண்டே இருக்கட்டும். சைவமும் தமிழும் தழைத்தினி தோங்க நமது பாரம்பரிய கலை கலாச்சாரங்கள் உதவட்டும். நின் திருவொளி சுடர்விட்டு அன்பர்கள் உள்ள மெல்லாம் பிரகாசிக்கட்டும்.

**"உற்ற செந் தமிழார் மாலை யிரைந்தும்**
**உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்**
**சுற்றமுமாகித் தொல்வினை யடையார்**
**தோன்றுவர் வானிடைப் பொலிந்தே"**

**இராஜரெட்ணம் மகேந்திரராஜா**
(பிருந்தாவனம்)
உப தலைவர்-இராஜரெட்ணம் நடனாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்கயிலை வாசனின் திருநகர் உலா

பாறைகள் பசுமைகள் கலை மான்கள்
மலை மோதிச் சிதறிடும் பேரலைகள்
நீலக் கடல் ஆடையின் ஓரங்களில்
அலை தேடிய சிதறல்தான் வெண்கரையோ
கிளை தாவித் திரிந்திடும் மந்திகளும் – தங்கள்
பாவம் தொலைந்திட வந்தவையோ
கானகக் காட்டினைத் தேடாமல் வந்து
ஆனந்தம் கண்டிடும் புள்ளினங்கள்
பாபநாசச் சுனையும் உண்டு
கோண நாயகன் ஆட்சியிலே
பக்தர் தேடிப் பரவிடும் கோணேசர்
திருவலம் நாடித் தெருவினில் இலங்குகின்றான்
உங்கள் குரல்களைக் கேட்பதற்கும்
வாட்டும் குறைகளைப் பார்ப்பதற்கும்
மங்கள நாயகி மாதுமையுடன் சங்கொலி
நெஞ்சனை மீட்டி விட
மங்களமாய் இங்கு வருகின்றான்
இது அவன் திருநகர் உலா
மாதுமை நாயகன் உலாக்காண
மாநகர் கண்டிடும் பக்தர் வெள்ளம்
வாழை மரங்கள் தோரணங்கள்
மலர் விழைத்த அலங்காரம்
கண்கள் கூசிடும் மின் குமிழ்கள்
காவியம் படைத்ததோ தென்கயிலை
வாசனின் உலாக்காண.

**பிருந்தாவனம்**

## தேவாரக் கோயில்

### கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்து

'தாயினும் நல்ல தலைவரென்றடியார் தம்மடி போற்றி செய்வாயினும் வாயினும் மனத்தும் மருவிநின்றகலா மாண்பிலராம்" மாதுமையம்பாள் சமேத திருக்கோணேஸ்வரப் பெருமானின் ஆலய சிறப்பினை ஸ்ரீ காஞ்சி காமகோடி ஜெகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் பின்வருமாறு கூறியுள்ளார்கள்.

க்ஷேத்திரங்கள் இரண்டு வகை தேவாரப் பாடல் பெற்றது அல்லாதது என்பன. தேவாரத்திற்கு மூவர் தேவாரமெனப் பிரசித்தியுண்டு ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் இம்மூவர் தேவார ஆசிரியர்களாவர். இயற்கையாகவே கோயிலுள்ள பூமிபவித்திர பூமி புண்ணியபூமி சமயக் குரவர்களால் தேவாரம் பாடப் பெற்றது மிகவும் பவித்திரமான பூமி. மனித வாழ்விலே நாம் எவ்வளவோ பாவங்களைச் செய்திருக்கின்றோம் நம்முடைய பாவங்கள் அகல நம்முடைய எண்ணங்கள் மேலிட தேவார க்ஷேந்திரங்களை வலம் வருவதும், தரிசிப்பதும், தேவாரப் பாடல்களைப் பாடுவதும் மிகவும் உன்னதமான பணி. ஆயிரம் புதுக் கோயில்களைக் கட்டுவதில் அதிலும் ஒரு தேவாரக் கோயில் கட்டுவதில் மிகுந்த புண்ணியமுண்டு. ஈழநாட்டிலே தேவாரம் பாடல் பெற்ற இரண்டு சிவதலங்கள் உண்டு. தெட்சண கயிலாசம் என்று போற்றப்படுவது திருக்கோணேஸ்வரம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டிய விழாவினை
# சிறப்பிக்கும் அணி இசைக் கலைஞர்கள்



**ஆக்கம், இசையமைப்பு**
சுவாமி. **ஸ்வஸ்தானந்தா**
ஸ்ரீ லலிதாம்பிகை தேவஸ்தானம், திருமலை.



**நடன நெறியாள்கை, நட்டுவாங்கம்**
திருமதி. **ரேணுகாதேவி செல்வபுத்திரன்**
நாட்டியக் கலைமணி, நாட்டிய வித்தகி,
இசை நடன நவரத்னா, அபிநய ஆசான்
**(Dip. in Dance, Dip. in Edu.)**



**பாட்டு**
சங்கீத வித்துவான்
செல்வன். **ஸ்ரீ திவாகர் செல்வரட்ணம்**



**பாட்டு**
இசைக் கலாவித்தகி
திருமதி. **பத்மலோஜினி குணராஜசிங்கம்**



**மிருதங்கம்**
"சாம ஸ்ரீ தேசமான்ய", கலா சரஸ்வதி"
"மிருதங்க கலா வித்தகர்"
திருமலை. **சி.காண்டீபன்** **(B.Sc, Dip. in Edu., M.Sc.)**



**வயலின்**
இசைக்கலைமணி
திரு. **சிங்காரவேல் திருமாறன்**



**வயலின்**
செல்வன். **முருகானந்தன் பவதாரணன்**



**வீணை**
சங்கீத வித்துவான். **N.S. வாகீஷன்**



**புல்லாங்குழல்**
செல்வி. **கிரிஜா கனகரெட்ணம்** **(B.A., Dip. in Edu.)**



**ஒகன்**
திரு. **விநாயகமூர்த்தி செந்தூரன்**
**Music Director & Leader of Asians Orchestra.**



**தபேலா**
திரு. **பொன். விபுலானந்தா**
மிருதங்க வித்துவான்.



**Persuasion and Special Effect**
திரு. **சந்தானம் ஆனந்தராஜ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றியுரை

"நன்றி மறப்பது நன்றன்று" என்ற பொய்யாமொழிப் புலவர் வள்ளுவரின் வாக்கிற்கிணங்க உற்ற காலத்தில் ஒருவர் செய்யும் உதவி சிறிதளவாக இருந்தாலும், அதன் தன்மையை அறிவோமானால் அது இவ் வையகத்தினை விட மிகப் பெரியதாகின்றது. நன்றியை வெளிப்படுத்தும் மனப்பாங்கு ஒன்றே சமூகத்தில் ஓர் நல்லுறவையும், பிணைப்பையும் இன்னும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது என்று கூட நாம் கூறலாம். ஓர் சிறிய உதவி என்றாலும் நம் நெஞ்சம் நிறைந்த நன்றிகளைக் கூறும் போது தான் உதவி செய்தவரின் தோழமை, பரிவு மற்றும் மனித நேயத்தை போற்றுபவராக நிற்கின்றோம். இதன் மூலம் செய்யப்பட்ட அந்த உதவிக்கு உரிய அங்கீகாரமும், அந்த நேயத்திற்கு ஓர் மகத்தான அடையாளமும் கிடைக்கின்றது என்பது எனது எண்ணம்.

அந்த வகையில், எனது திருமலை மண்ணிலே பரதக்கலையினைப் பயிற்றுவிக்கும் ஒரு குருவாக நான் கடந்து வந்த 30 வருட கால கலைப்பயணத்தின் வெற்றிக்கு பரிபூரண ஆசிகளை நல்கும் நிரைகழல் அரவம் சிலம்பொலி அலம்பும் நிமலராக கோணமாமலையிலே உமையொரு பாகமாய் எழுந்தருளி அருளாட்சி புரியும் மாதுமை அம்பாள் சமேத திருக்கோணேஸ்வரப் பெருமானின் திருவடிகளில் என் முதற்கண் நன்றிகளை உரிமையாக்கி, என்றும் என் பெரும் மதிப்பிற்குரிய பெற்றோருக்கு **"தென்கயிலை வாசா"** என்ற எனது படைப்பின் பரிபூரணத்துவத்தினை சமர்ப்பணம் செய்கின்றேன். இந் நாட்டிய நாடகம் திறம்பட மேடையேற்றப்படுவதற்கு உறுதுணையாக இருந்த சுவாமி.ஸ்வஸ்தானந்தா அவர்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் அணிசேர் கலைஞர்கள் அனைவருக்கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

தொடர்ந்து எமது **இராஜரெட்ணம் நடனாலயத்தின்** பெருமைக்கும் வளர்ச்சிக்கும் இன்று வரை எனக்கு பக்கபலமாக துணை நிற்கும் எனது கணவர், குடும்பத்தினர், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், மற்றும் இரசிகர்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த நன்றிகள். என் எண்ணிய எண்ணம் தனை இன்று திண்ணிய செயலாக என் கண் முன் **"தென்கயிலை வாசா"** என்று நாமம் கொண்டு நாட்டிய நாடகப் பாங்கில் அரங்கேறி கண்களுக்கு விருந்தளிக்கும் அதே வேளை, **தென்கயிலை வாசா சிறப்பு மலர்** இனிதே வெளிவருவதற்கு உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள். குறிப்பாக ஆசிச்செய்திகள், வாழ்த்துச் செய்திகள் வழங்கி சிறப்பித்தோருக்கும், தமது ஆக்கங்களை தந்து இச் சிறப்பு மலரினை மேலும் அழகுறச் செய்த பேராசிரியர்கள், அதிகாரிகள் அனைவருக்கும், மற்றும் இம் மலரினை சிறப்பான முறையில் ஒழுங்கமைக்க தமது ஒத்துழைப்பினை வழங்கிய மலர்க்குழு அங்கத்துவர்களுக்கும், நிதியுதவிகளை வழங்கிய அனைவருக்கும் எனது பணிவன்பான நன்றிகள். மேலும், குறுகிய காலத்தில் இம் மலரினை சிறப்புற வடிவமைத்து, அச்சிட்டு வழங்கிய சரவணா பிரிண்டர்ஸ் நிறுவனத்தாருக்கும், இவ் விழா இனிதே அரங்கேற நேரடியாகவும், மறைமுகமாகவும் பல வழிகளில் உதவிகளை வழங்கிய, வழங்க முயன்ற அனைத்து நெஞ்சங்களுக்கும் எனது ஆத்மார்த்தமான நன்றிகள். நிறைவாக, எமது இராஜரெட்ணம் நடனாலயத்தின் வளர்ச்சியில் அன்றும், இன்றும், என்றும் நல்லெண்ணம் கொண்டு உதவிகளையும், கருத்துக்களையும், ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்கி வரும் ஒவ்வொரு உள்ளங்களுக்கும் எனது இதய பூர்வமான நன்றிகளை உவகைப் பெருக்குடன் உரிமையாக்குகின்றேன்.

- நன்றி -

நாட்டியக் கலைமணி, நாட்டிய வித்தகி
திருமதி. **ரேணுகாதேவி செல்வபுத்திரன்**
இராஜரெட்ணம் நடனாலய ஸ்தாபகர்,
திருகோணமலை.

University of Jaffna
204206
Library



ARCHIVES
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



அண்டி வந்தோரைக் காக்கும் அன்னையே
நாம் கேட்டவரம் தரும் தாயே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி

DESIGNED & PRINTED BY SARAVANA PRINTERS. TEL: 026 2227079

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org